அதற்குத் தீர்வாக அமைச்சினால் பல்கலைக்கழக முறைமையின் நிர்மாணப் பணிகளை வகைப்படுத்தி பெறுகை நடைமுறைக்கமைய பிரேரணைகள் மற்றும் விலை மனுக்களைக் கோரி பல்கலைக்கழகங்களுக்காக அங்கீகரிக்கப்படும் நிர்மாணச் செயல் திட்டங்களுக்காக ஆலோசகர்களின் பெயர் பட்டியல் ஒன்றைத் தயாரித்து பல்கலைக்கழகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, அவ்வாறான செயல் திட்டங்களுக்கான பெறுகை நடவடிக்கைகளுக்காக அதிக காலத்தைச் செலவு செய்து பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசகர்களை நியமிப்பதற்குப் பதிலாக அதிக காலத்தைச் செலவு செய்யாது இந்தப் பட்டியலில் இருந்து ஆலோசகர்களைத் தேர்ந்தெடுத்து துரிதமாக நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு இயலுமாக இருந்தது.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவி - உயர் கல்வி அமைச்சு

2012 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் அலுவல்கள் 2014 ஆம் அண்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சின் தகவல் தொழில்நுட்பப் பாகங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த இந்தப் பிரிவு அமைச்சு அலுவல்களின் வினைத்திறனை அதிகரிக்கும் தகவல் தொழில்நுட்ப தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் அலுவல்கள் அதன் பொதுவான அலுவல்களுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதான பிரிவுகளாக வேறுபடுத்திக் காட்ட முடியும்.

### தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவின் அலுவல்கள்

- அமைச்சுக்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கல்
- இணைய வழி விடுமுறை முகாமைத் தொகுதியை செயற்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- அமைச்சின் இணையத்தள வசதிகளை விரிவுபடுத்தல் (நுஂழியனெபைெ டீயனெறனைவா ழுக ஐவெநசநெவ டுநயளநன டுநைெ)
- இணையவழி புலமைப் பரிசில் முகாமைத் தொகுதியை செயற்படுத்துதலுடன் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படும் புதிய மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சியை செயற்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- அமைச்சின் இணையத் தளத்தினை இற்றைப்படுத்தல்.
- ஸ்மார்ட் சீட் (ளஅயசவளாநநவ) மென்பொருள் பாவனையின் ஊடாக அமைச்சின் செயல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிகடகைகளை மேற்கொள்ளல்
- அமைச்சினுள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கல்

அமைச்சில் அன்றாடம் கணனிகளில் ஏற்படும் கோளாறுகள், இணையத்தளம் செயற்படாமை என்பவற்றை சீர் செய்தல் மற்றும் புதிய கணனி நிரல்களை (உழஅிரவநச ிசழபசயஅ) செயற்படுத்தும்போது பயன்படுத்துவோர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் அதற்கான பயற்சியை வழங்குதல். ஏனைய தொழில்நுட்பக் கருவிகளை (அச்சு இயந்திரம், தொலைநகல்(பெக்ஸ்)இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம், அரடவைஅநனயை னநளஉைநள) தாபித்தல், அவற்றைப் பயன்படுத்தும்போது ஏற்படும் கோளாறுகளை நிவர்த்திசெய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஆலோசனை வழங்குதல். கணனிகளுக்குத் தேவையான மென்பொருட்களை தரவிறக்கம் செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பயன்படுத்தல், வன்பொருட்களை பொருத்துதல் மற்றும் கோளாறுகளை சீர் செய்தல், இணையத்தள நெரிசல்களைக் குறைத்தல் மற்றும் கண்காணித்தல், தேவையற்ற விதத்தில் இணையத்தளம் பாவிக்கப்படின் அவற்றைத் தடுத்தல், கணனி வைரஸ் பாதுகாப்பு மென் பொருளை தாபித்து இற்றைப்படுத்தி பேணிவரல் போன்ற பல சேவைகள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- **இணையவழி விடுமுறை முகாமைத் தொகுதியை செயற்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.**

இலங்கை அரச பல்கலைக்கழகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிக்காக தனிப்பட்ட மற்றும் அலுவல்கள் நிமித்தமான வெளிநாட்டுப் பயணங்களின்போது அதற்கான விடுமுறைகளை விண்ணப்பிப்பதற்காக இணையவழி விடுமுறை முகாமைத் தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு மிகவும் வினைதிறன்மிக்க, இலகுவான மற்றும் துரித சேவையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இதனை அபிவிருத்திப் பிரிவில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமான தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பு, பிரச்சினைகளைத் தீர்த்தல், தொகுதியை தயாரித்த

நிறுவனம் மற்றும் அதனைப் பயன்படுத்தும் பிரிவுகளுக்கிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பயன்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழும் சந்தர்ப்பங்களின்போது தேவையான பயிற்சி மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற அலுவல்கள் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

- **அமைச்சின் இணையத்தளத்தினை இற்றைப்படுத்தல்**

தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக அமைச்சின் இணையத்தளம் அன்றாடம் இற்றைப்படுத்தப்படுகின்றது. அதன் முதற் பக்கத்தில் புதிய செய்திகள் மற்றும் விசேட புகைப்படங்களை உட்படுத்தல், விசேட அம்சங்களைப் பிரசுரித்தல், புதிய தேசிய மற்றும் சர்வதேச இளமாணிப் பட்டங்கள் மற்றும் முதுமாணிப் பட்டங்களுக்கான புலமைப் பரிசில்கள் சம்பந்தமான அறிவித்தல்களைப் பிரசுரித்தல், அமைச்சினால் நடாத்தப்படும் புதிய வேலைத் திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் மற்றும் புகைப்படங்களைப் பிரசுரித்தல், அமைச்சின் செய்திகளைப் பிரசுரித்தல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்படும்.

- **பல்கலைக்கழகத்தில் பிரவேசிக்கும் புதிய மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டத்தினை செயற்படுத்துவதுடன் தொடர்பான நடவடிக்கைகளை எற்பாடு செய்தல்.**
  பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்ததன் பின்னர் உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஆயத்தமாக இருக்கும் மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்தல் இந்தப் பயிற்சிப் பாடநெறியின் முக்கிய நோக்கமாகும். அங்கு ணு புள்ளிகளின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக பாடநெறிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை குழுக்களாகப் பிரித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் பயிற்சி வழங்கப்படும். இந்த மாணவர்களை குறிப்பிட்ட பயிற்சி நிலையங்களுக்காகத் தெரிவு செய்தல், பயிற்சி நிலையங்களுக்காக மாணவர்களின் பெயர் பட்டியலைத் தயாரித்தல் போன்ற அலுவல்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். 2014 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 23,080 மாணவர்களை 20 பயிற்சி நிலையங்களில் சேர்க்கும் நடவடிக்கை இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே அந்த மாணவர்களுக்குத் தேவையான சகல ஆவணங்களைத் தயாரித்தல், அச்சிடுதல் மற்றும் கடிதங்களை அனுப்பும் நடவடிக்கைகளும் இந்தப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

- **இணையத்தள வசதிகளை விரிவுபடுத்தல். (Expanding Bandwidth of Internet Leased Line)**

முன்னர் 1 MBPS வேகத்தைக் கொண்டிருந்த இணையத்தளம் தற்போது 5 MBPS வரை அதிகரிக்கப்பட்டு மிக வேகமான வினைதிறன்மிக்க இணையத்தள சேவை வழங்கப்படுகின்றது. LEARN நிறுவனத்தின் ஊடாக Internet Leased Line வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- Smartsheet Cloud Based மென் பொருளை தாபித்தல்

  இந்த மென் பொருள் இணையவழி மென்பொருளாகக் காணப்படுவதனால் அமைச்சின் முகாமைத்துவத்திற்கு இணையத்தள தொடர்புகள் ஊடாக எச்சந்தர்ப்பத்திலும் தொடர்புகொண்டு குறிப்பிட்ட திட்டங்களை மாற்றியமைப்பதற்கும் பின்னூட்டல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியும். அவ்வாறே பல்கலைக்கழகங்களில் இருந்து தரவுகள் மற்றும் தகவல்களை இணையத்தளம் ஊடாக மிகவும் வினைத்திறன்மிக்க வகையில் பெற்றுக்கொள்ள முடியும். இணையத்தள வசதிகள் இருக்கும் எந்தவொரு இடத்தில் இருந்தும் சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதனால் அது முகாமைத்துவத்திற்கு தீர்மானங்களை எடுப்பதற்கு பயன்படும். இந்தத் தொகுதி எதிர் காலத்தில் அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரச பல்கலைக்கழகங்கள் வரை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.


## அபிவிருத்திப் பிரிவு – உயர் கல்வி அமைச்சு

உயர் கல்வி அமைச்சில் பல்வேறு அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள பிரிவுகளில் அபிவிருத்திப் பிரிவினால் முக்கிய அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**சேவை பெறுநர்கள்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆளணி
- அரச பல்கலைக்கழகங்கள்.'.வளாகங்கள்.'.உயர்கல்வி அமைச்சின் ஆளணி
- பல்கலைக்கழகங்களின் வளாகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள்
- உயர்கல்வி நிறுவகங்களுடன் சம்பந்தப்பட்ட செயற்றிட்ட ஆளணி மற்றும் அவற்றில் பணிபுரியும் வெளிநாட்டு வளவாளர்கள்
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இளமாணி மற்றும் முதுமாணி புலமைப்பரிசில்களுக்காக விண்ணப்பிப்பவர்கள்.
- ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள்

# ஆளணி


மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) – 01
பணிப்பாளர் (அபிவிருத்தி) – 01
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் புலமைப்பரிசில்) - 01
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)-01
அபிவிருத்தி உத்தியோகத்தர் - 01
அரச முகாமைத்துவ உதவியாளர் III = 01
அலுவலக உதவியாளர் III - 01
அரச முகாமைத்துவ உதவியாளர் I - 02
அபிவிருத்தி உதவியாளர்கள் - 04
அபிவிருத்தி உத்தியோகத்தர் - 05
அரச முகாமைத்துவ உதவியாளர் II - 01
அரச முகாமைத்துவ உதவியாளர் III -02
முகாமைத்துவ உதவியாளர் - 01
(ேழுனுநுளு) இன் மூலம் இணைக்கப்பட்டுள்ள
அலுவலக உதவியாளர் III - 01

**அபிவிருத்திப் பிரிவு – உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை**

| **இல:** | **பதவிப் பெயர்** | **2014.01.01 ஆம் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை** | **2014.12.31 ஆம் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01. | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) | 01 | 01 |
| 02. | பணிப்பாளர் (அபிவிருத்தி) | 01 | 01 |
| 03. | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி மற்றும் புலமைப்பரிசில்) | 01 | 01 |
| 04. | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 01 | 01 |
| 05. | அரச முகாமைத்துவ உதவியாளர் ஐ | 02 | 02 |
| 06. | அபிவிருத்தி உதவியாளர் | 04 | 04 |
| 07. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 06 | 05 |
| 09. | அரச முகாமைத்துவ உதவியாளர் 11 | 01 | 01 |
| 10 | அரச முகாமைத்துவ உதவியாளர்- ஐஐஐ<br>முகாமைத்துவ உதவியாளர் - ஐஐஐ (ழேனுநுளு) இன் மூலம் இணைக்கப்பட்டுள்ள | 02<br>01 | 02<br>01 |
| 11. | அலுவலக உதவியாளர் | 02 | 02 |
| | **மொத்தம்** | **22** | **21** |

# அபிவிருத்திப் பிரிவின் கடமைகள்

- பல்கலைக்கழக வேந்தர்கள் மற்றும் உபவேந்தர்களின் நியமனம் சம்பந்தப்பட்ட அலுவல்கள்
- சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் அப்பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கும் பட்டப்பின் கற்கை நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வெளிநாட்டு விடுமுறை கோரும் விண்ணப்பங்களை அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கௌரவ அமைச்சர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சமர்ப்பிக்கும் அலுவல்கள்.
- பல்கலைக்கழகங்கள், பட்டப்பின் கற்கை நிறுவனங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவகங்களின் ஆளணியைச் சேர்ந்தவர்கள், அந்த நிறுவனங்கள் ஈட்டிய நிதியம் (Generated Funds) மற்றும் உள்நாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது செலவாகும் செலவுகளுக்கான அங்கீகாரத்தினை தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திடமிருந்து அல்லது அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழக ஆளணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு 431 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன அனுமதிப் பத்திரத்திற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் அலுவல்.
- பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பல்வேறு உதிரிப்பாகங்களை விமானத்தின் மூலம் இறக்குமதி செய்வதற்கு 368 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் அலுவல்.
- பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பல்வேறு உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும்போது அவ்வாறான பொருட்களுக்கான தீர்வை வரி மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிப்பு சம்பந்தமான விண்ணப்பங்களுக்கு 2012.11.08 ஆந் திகதிய 1783/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை சுங்கத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்
- இலங்கை பிக்குமார்களுக்கான பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகங்களுடன் சம்பந்தப்பட்ட சகல அலுவல்கள் (ஆட்சேர்ப்பு தவிர்ந்த)
- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகார சட்டத்தின்படி புதிய பாடநெறிகளை ஆரம்பித்தல், பாடநெறிகளை மாற்றியமைத்தல், புதிய பீடங்கள் மற்றும் பிரிவுகளை ஆரம்பித்தல் போன்றவை சம்பந்தமான விதிமுறைகளை வெளியிடல்
- பல்கலைக்கழகங்களில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதி செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்கள் சம்பந்தப்பட்ட அலுவல்களை மேற்கொள்ளல்
- வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துடன் தொடர்பான சகல அலுவல்கள்
- பொதுநலவாய அமைப்பின் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துடன் தொடர்பான சகல அலுவல்கள்
- வெளிநாடுகள் மற்றும் பட்டங்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் இளமாணிப் பட்டம் மற்றும் பட்டப் பின் கற்கைகளுக்கான புலமைப்பரிசில் பெறுபவர்களின் பெயர்களைப் பிரேரித்தல் சம்பந்தப்பட்ட சகல அலுவல்கள் (அறிவித்தல்,விண்ணப்பங்களை விதிமுறைகளுக்கமைய தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை நடாத்துதல் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை சிபார்சு செய்து குறித்த நாடுகளுக்கு மற்றும் நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்)

- இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு மற்றும் இந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வருகைதரும் விரிவுரையாளர்களுக்கு நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கான வீசா அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வது மற்றும் அவற்றை நீடிப்பது சம்பந்தமாகக் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்களை சிபார்சுசெய்து குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரிடம் சமர்ப்பிக்கும் அலுவல்.
- வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் வெளியுறவு அமைச்சினூடாகக் கிடைக்கப்பெறும் குறுகியகால பயிற்சிப் பாடநெறிகள் சம்பந்தமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஆளணியை அறிவுறுத்தல் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் ஊடாக முன்வைக்கப்படும் பெயர்களை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்
- இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட மற்றும் கைச்சாத்திடப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சம்பந்தப்பட்ட அலுவல்களை மேற்கொள்ளல்.
- அரச பல்கலைக்கழகங்களுக்குரிய காணிகள் சம்பந்தப்பட்ட சகல அலுவல்கள்
- மும்மொழி இலங்கை வேலைத்திட்டம் சம்பந்தப்பட்ட அலுவல்கள்
- பட்டச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் இணையாக்குதல் சம்பந்தமாக கிடைக்கப்பெறும் கடிதங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.ஃ.உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்து அவற்றுக்கான பதிலைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் தொடர்பான அனைத்து அலுவல்கள்
- கவிதா (ஆற்றல்) நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பான செலுத்துகைகள் சம்பந்தமான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் அலுவல்கள்

**அலுவல் ஒப்படைப்பு**

**உத்தியோகத்தரின் பெயர்: திருமதி பீ.எம்.எஸ்.பண்டார**
**பதவி: பணிப்பாளர்(அபிவிருத்திப் பிரிவு)**
**பிரிவில் சேவைக் காலம்: 2008.04.04 – 2015.01.31**

**மேற்கொள்ளும் அலுவல்கள்**

01. வேந்தர் ∴ உப வேந்தர் நியமனம்
02. முகாமைத்துவ சபை உறுப்பினர்களை நியமித்தல்
03. புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் தொடர்பான அலுவல்கள்
04. வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசாக்களை வழங்குதல்.
05. நாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்களின் உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்குதல்
06. பல்கலைக்கழகங்களினால் ஈட்டப்படும் நிதியங்களின் ஊடாக விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவல்
07. வரிகள்∴பெறுமதிசேர் வரி∴சுங்க வரிகளில் இருந்து விலக்களிப்புச் செய்யும் அலுவல்கள்
08. அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்குச் சொந்தமான காணிகள் சம்பந்தமான அலுவல்கள்.
09. அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்பான பிரச்சினைகள்
10. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட சகல அலுவல்கள்.
11. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வியுடன் தொடர்பான அலுவல்கள்.
12. ஒப்படைக்கும் ஏனைய அலுவல்கள்.

- **உத்தியோகத்தரின் பெயர்: திருமதி கே.ஏ.பீ.பெரேரா**
- **பதவி: உதவிப் பணிப்பாளர் II (புலமைப் பரிசில் மற்றும் அபிவிருத்தி)**
- **பிரிவில் சேவைக் காலம்: 2011.05.02 முதல் இதுவரை**

**மேற்கொள்ளும் அலுவல்கள்**

01. இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதி புலமைப் பரிசில் 100 நிகழ்ச்சித் திட்டம்.
02 வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் புலமைப் பரிசில்கள் தொடர்பான சகல அலுவல்கள்.
03. வெளிநாடுகளினால் வழங்கப்படும் பயிற்சி நெறிகள், மாநாடுகள்.
04. வெளிநாட்டு மாணவர்களுக்கு வீசா வழங்குதல்.
05. நாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேரந்த உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்கல்.
    1. கொழும்புப் பல்கலைக்கழகம்.
    2. கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டப்பின் கற்கை நிறுவனம் மற்றும் கணனி தொழில்நுட்ப நிறுவனம்.
    3. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
    4. முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனம்.
    5. மொரட்டுவை பல்கலைக்கழகம் ∴ தொழில்நுட்ப நிறுவனம்.
    6. றுஹுணு பல்கலைக்கழகம்.
    7. இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்.
    8 இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்.
    9. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
    10. இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
06. ஈட்டப்படும் நிதியின் ஊடாக மேற்கொள்ளப்படும் விமான டிக்கட்டுக்ளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள்.
07. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
08. ஒப்படைக்கப்படும் ஏனைய அலுவல்கள்

- **உத்தியோகத்தரின் பெயர்: செல்வி ஜே.ஏ.டீ.எஸ்.ஜயசிங்க**
- **பதவி: உதவிப் பணிப்பாளர் II (அபிவிருத்தி)**
- **பிரிவில் சேவைக் காலம்: 2012.01.02 முதல் இதுவரை**

**<u>மேற்கொள்ளும் அலுவல்கள்</u>**

01. அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குரிய காணிகள் சம்பந்தமான அலுவல்கள்
02. பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களுடன் தொடர்பான பிரச்சினைகள்
03. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துடன் தொடர்பான சகல அலுவல்கள்.
04. வேந்தர், உபவேந்தர் நியமனம்
05. முகாமைத்துவ சபை உறுப்பினர்களை நியமித்தல்
06. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களுடன் தொடர்பான அலுவல்கள்.
07. வரி /பெறுமதி சேர் வரி /சுங்க வரிகளில் இருந்து விலக்களிப்புச் செய்யும் நடவடிக்கைகள்
08. நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்குதல்.
    1. பேராதனை பல்கலைக்கழகம்
    2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
    3. ரஜரட்ட பல்கலைக்கழகம்
    4. களணிப் பல்கலைக்கழகம்
    5. கம்பஹா விக்கிரமாரச்சி ஆயர்வேத கற்கைகள் நிறுவகம்
    6. பட்டப்பின் கற்கை நிறுவகம்
    7. தொல்பொருளியல் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்
    8. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
    9. திறந்த பல்கலைக்கழகம்
    10. அழகியற்கலை பல்கலைக்கழகம்
    11. விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனம்
    12. பிக்குகள் பல்கலைக்கழகம்
09. ஈட்டப்படும் நிதி ஊடாக மேற்கொள்ளப்படும் விமான டிக்கட்டுக்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள்.
10. ஒப்படைக்கப்படும் ஏனைய அலுவல்கள்

**<u>மேலதிக செயலாளர்(அபிவிருத்தி) அலுவலகத்தின் அலுவல்கள பட்டியல்</u>**

- மேலதிக செயலாளரால் (அபிவிருத்தி) ஏற்பாடு செய்யப்படும் கூட்ட நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல்.

- வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களுக்காக மாணவர்களைத் தேரந்தெடுத்தல் மற்றும் அதற்காக நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்காக ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

- மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் கடிதங்கள் மற்றும் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) அலுவலகத்தினால் அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பான நடவடிக்கைகள்.

- மேலதிக செயலாளர் அலுவலகத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) ஒப்படைக்கும் ஏனைய அனைத்து அலுவல்களை நிறைவேற்றல்.

**<u>மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) அலுவலகத்தின் ஆளணி</u>**

- திருமதி எஸ்.கே.டீ.ஐ.ஜயமாலி – அபிவிருத்தி உத்தியோகத்தர்
- செல்வி கே.எஸ்.ஜீ.பெரேரா – அரச முகாமைத்துவ உதவியாளர் (iii)
- திரு. உதயங்க ஜயவர்தன – அலுவலக உதவியாளர் (iii)

**2014 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய வேந்தர்கள், உபவேந்தர்கள் பற்றிய விபரம்**

| இலக்கம் | பல்கலைக்கழகங்கள் | வேந்தர் | உபவேந்தர் | நியமனத் திகதி | பதவிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01. | பௌத்த மற்றும் பாளி | சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த தேரர் | - | 2014.01.16 | 2019.01.15 |
| 02. | யாழ்ப்பாணம் | பேராசிரியர் எஸ் பத்மநாதன் | - | 2014.03.17 | 2019.03.16 |
| 03. | ரஜரட்ட | கலாநிதி லீல் குணசேக்கர | - | 2014.04.24 | 2019.04.23 |
| 04. | களணி | - | பேராசிரியர் வை.எம்.சுனந்த மத்தும பண்டார | 2014.03.19 | 2017.03.18 |
| 05. | யாழ்ப்பாணம் | - | பேராசிரியர் திருமதி வீ.அரசரத்னம் | 2014.04.24 | 2017.04.23 |
| 06. | சப்ரகமுவ | - | பேராசிரியர் சந்தன பீ.உடவத்த | 2014.05.13 | 2017.05.12 |
| 07. | மொரட்டுவை | - | பேராசிரியர் ஏ.கே.டப்ளியூ.ஜயவர்தன | 2014.10.14 | 2017.10.13 |
| 08. | ஊவா வெல்லஸ்ஸ | - | கலாநிதி ஜீ.சந்திரசேன | 2014.10.18 | 2017.10.17 |
| 09. | அழகியற்கலை | - | பேராசிரியர் ஏ.களுஆரச்சி | 2014.10.20 | 2017.10.19 |
| 10. | பௌத்த மற்றும் பாளி | - | பேராசிரியர் சங்கைக்குரிய கல்லேல்லே சுமணசிரி தேரர் | 2014.10.30 | 2017.10.29 |
| 11. | ஸ்ரீ ஜயவர்தனபுர | - | பேராசிரியர் எஸ்.பீ.பீ.அமரதுங்க | 2014.11.17 | 2017.11.16 |

### இலங்கை மாணவர்களுக்கான வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள்

வெளிநாடுகளில் உயர் கல்விக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வருடாந்தம் இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டங்களுக்கான புலமைப் பரிசில்களை வழங்குவது இந்த அமைச்சின் முக்கிய அலுவல்களில் ஒன்றாகும்.

பல வெளி நாடுகளினால் வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அது பற்றிய தகவல்கள் மும்மொழிகளிலும் முன்னணிப் பத்திரிகைகள் மற்றும் அமைச்சின் இணையத்தளமான ஐஐஐ.அழாந.பழஎ.டம ஊடாக அறிவிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விணப்பங்களின் பிரகாரம் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளை குறிப்பிட்ட நாடுகளுக்காக பெயர் குறிப்பிடப்படும். இந்தப் புலமைப் பரிசில்களுக்குத் தகைமை பெற்றவர்களைத் தேரந்தெடுக்கும் நடவடிக்கையானது திறந்த மற்றும் வெளிப்படைத் தன்மையுடன்கூடிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இறுதித் தேர்வை குறிப்பிட்ட புலமைப் பரிசிலை வழங்கும் நாடு அல்லது குறிப்பிட்ட நிறுவனம் மேற்கொள்ளும். 2014 ஆம் ஆண்டில் 217 மாணவர்களுக்கு வெளிநாட்டு இளமாணிப் பட்டங்களுக்கான புலமைப் பரிசில்களும் 64 மாணவர்களுக்கு முதுமாணிப் பட்டங்களுக்கான புலமைப் பரிசில்களும் இந்த அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. 2011 – 2014 வரையிலான காலப் பகுதியில் முதுமாணி மற்றும் இளமாணிப் பட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணை 6.1 மற்றும் 6.2 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

**முதுமாணிப் பட்டங்களுக்கான புலமைப் பரிசில்கள் 2011-2014**

| இல: | நாடு | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 13 | 42 | 37 | 31 |
| 2 | சீனா | 17 | 3 | 11 | 16 |
| 3 | ஜப்பான் | 6 | 6 | 9 | 9 |
| 4 | நியூசிலாந்து | 2 | 1 | 1 | 1 |
| 5 | ஐக்கிய இராச்சியம் | 6 | 6 | 7 | 7 |
| | **மொத்தம்** | **44** | **58** | **65** | **64** |

**இளமாணிப் பட்டங்களுக்கான புலமைப் பரிசில்கள் 2011-2014**

| இல: | நாடு | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| 1 | பங்களாதேஷ் | 3 | - | 5 | 7 |
| 2 | இந்தியா | 42 | 122 | 115 | 133 |
| 3 | சீனா | 10 | 9 | 13 | 18 |
| 4 | புரூணை | 2 | 2 | - | - |
| 5 | கொரியா | 2 | 1 | 1 | 2 |
| 6 | கியூபா | 4 | 4 | - | 2 |
| 7 | ர்'யா | 18 | 25 | 20 | 37 |
| 8 | பாகிஸ்தான் | 5 | 8 | 9 | 10 |
| 9 | சர்பியா | 2 | 1 | 1 | 1 |
| 10 | மெசிடோனியா | - | 2 | - | 1 |
| 11 | வியட்னாம் | - | 3 | 5 | 5 |
| 12 | ஜப்பான் | - | 2 | 5 | 1 |
| | **மொத்தம்** | **88** | **179** | **174** | **217** |


**இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம்**

பல்வேறு நாடுகளிலிருந்து வருடாந்தம் உயர்கல்வி அமைச்சினூடாக இலங்கை மாணவர்களுக்கு 200 க்கும் மேற்பட்ட இளமாணி மற்றும் முதுமாணி புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. எனவே, வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கையில் உயர் கல்விக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் "இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்"தை 2011 ஆம் அண்டு உயர் கல்வி அமைச்சு ஆரம்பித்தது.

இந்த வெளிநாட்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் இலங்கையினது உயர்கல்வியின் தரம் சம்பந்தமாக வெளிநாடுகளுக்கு பிரசாரம் செய்வதும் அதனூடாக அரச பல்கலைக்கழகங்களில் பணம் செலுத்தும் அடிப்படையில் வெளிநாட்டு மாணவர்களை அதிகமதிகமாக கவரச் செய்வதும் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் வருடாந்தம் வழங்கப்பட்டுள்ள புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தற்போது 22 நாடுகளைச் சேர்ந்த புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொண்டுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 96 ஆகும். 12 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவகங்கள் தற்போது ஜனாதிபதிப் புலமைப் பரிசில் பெறுபவர்களுக்கு இளமாணி மற்றும் முதுமாணி புலமைப் பரிசில்களை வழங்குவதுடன் தற்போது நேபாளம், பூட்டான், நைஜீரியா மற்றும் கொரியா போன்ற நாடுகளைச் சேர்ந்த 6 மாணவர்கள் தமது கற்கைப் பாடநெறிகளை சிறப்பாகப் பூர்த்தி செய்துள்ளனர்.

**கற்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள்**



2014/15 கல்வியாண்டில் இளமாணி மற்றும முதுமாணிப் பட்டங்களுக்காக 188 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதுடன் அவற்றில் தகைமை பெற்ற 30 பேர் தற்போது பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டு கற்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் 16 மாணவர்கள் எதிர்காலத்தில் பதிவு செய்யப்படவுள்ளனர்.

2014 / 15 கல்வியாண்டில் வெளிநாட்டு மாணவர்களின் பதிவு மற்றும் எதிர்காலத்தில் பதிவு செய்யப்படவிருக்கும் மாணவர்கள் (2015.05.05 ஆம் திகதியன்று)

| | நாடு | பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் | பதிவு செய்யப்படவிருக்கும் மாணவர்கள் |
|---|---|---|---|
| 1 | பங்களாதே்ஷ | 1 | 1 |
| 2 | பூட்டான் | 3 | - |
| 3 | இந்தோனேசியா | 2 | - |
| 4 | ஜப்பான் | 1 | - |
| 5 | கென்யா | 1 | 1 |
| 6 | லத்வியா | 1 | - |
| 7 | மாலைதீவு | 5 | - |
| 8 | மியன்மார் | - | 2 |
| 9 | நேபாளம் | 5 | 1 |
| 10 | நைஜீரியா | 3 | 3 |
| 11 | பாகிஸ்தான் | 4 | 6 |
| 12 | ர்ஷ்யா | - | 1 |
| 13 | சுவாசிலாந்து | 1 | 1 |
| 14 | தன்சானியா | 2 | - |
| 15 | உகண்டா | 1 | - |
| | **மொத்தம்** | **30** | **16** |

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் இளமாணி மற்றும் முதுமாணிக் கற்கை நெறிகளுக்காக 2014 / 15 கல்வியாண்டிற்கான வெளிநாட்டு மாணவர்களின் பதிவு விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது. அவர்களில் எதிர்காலத்தில் பதிவு செய்வதற்கு உத்தேசமான மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

2014 / 15 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவகங்களில் மாணவர் பதிவு பற்றிய விபரம் (2015.05.05 ஆம் திகதியன்று)

| | பல்கலைக்கழகங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | இளமாணிப் பட்டம் | முதுமா ணிப் பட்டம் | மொத்தம் |
| 1 | கொழும்புப் பல்கலைக்கழகம் | 7 | 2 | 9 |
| 2 | ஐடீஆடீ நிறுவனம். | - | 1 | 1 |
| 3 | மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 3 | - | 3 |
| 4 | முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். | - | 2 | 2 |
| 5 | றுஹுணு பல்கலைக்கழகம் | 1 | - | 1 |
| 6 | களணிப் பல்கலைக்கழகம் | 3 | - | 3 |
| 7 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 2 | - | 2 |
| 8 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 4 | - | 4 |
| 9 | வவுனியா வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 3 | - | 3 |
| 10 | கிழக்குப் பல்கலைக்கழகம் | 2 | - | 2 |
| | **மொத்தம்** | **26** | **4** | **30** |

## வெளிநாட்டு விடுமுறை

**பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணிக்கு வெளிநாட்டு விடுமுறைகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல் பற்றிய விபரம் - 2014.01.01 முதல் 2014.12.31 வரை**

| பல்கலைக்கழகம் ∴ உயர் கல்வி நிறுவகம் | அலுவல் விடுமுறை | தனிப்பட்ட விடுமுறை | மொத்தம் |
|---|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 25 | 3 | 28 |
| பிக்குகள் பல்கலைக்கழகம் | 19 | 11 | 30 |
| பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 21 | 5 | 26 |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 436 | 199 | 635 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 464 | 111 | 575 |
| களணிப் பல்கலைக்கழகம் | 355 | 128 | 483 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். | 261 | 112 | 373 |
| மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 161 | 103 | 264 |
| ருஹுணு பல்கலைக்கழகம் | 172 | 48 | 220 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 90 | 76 | 166 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 59 | 34 | 93 |
| திறந்த பல்கலைக்கழகம் | 91 | 49 | 140 |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 65 | 14 | 79 |
| தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 43 | 43 | 86 |
| அழகியற்கலை பல்கலைக்கழகம் | 38 | 31 | 69 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 52 | 07 | 59 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 50 | 08 | 58 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 25 | 03 | 28 |
| வவுனியா வளாகம் | 04 | 0 | 04 |
| கம்பஹா விக்கிரமாரச்சி ஆயர்வேத கற்கைகள் நிறுவகம் | 33 | 04 | 37 |
| சுவாமி விபுலானந்த நிறுவகம் | 03 | 01 | 04 |
| பௌத்த மற்றும் பாளி பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | 01 | 01 | 02 |
| தொல்பொருளியல் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | 09 | 01 | 10 |
| ஆங்கிலப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | 02 | 02 | 04 |
| விவசாயப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | 04 | 01 | 05 |
| பட்டப்பின் கற்கைகள் முகாமைத்துவ நிறுவகம் | 02 | 02 | 04 |
| விஞ்ஞானப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | 0 | 01 | 01 |
| இலங்கை உயர் தொழில்நுட்பக் கற்கைகள் நிறுவகம் | 7 | 10 | 17 |
| **மொத்தம்** | **2492** | **1008** | **3500** |

## வீசா வழங்குதல் மற்றும் நீடித்தல்

2014.'.15 கல்வியாண்டில் அரச பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பயிலுவதற்காக வரும் வெளிநாட்டு மாணவர்களுக்கு வீசா வழங்கும் மற்றும் வீசாக்களை நீடிக்கும் அலுவல்களுக்கான சிபாரிசுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. மியன்மார், ஜேர்மன், பூட்டான், வியட்னாம் மற்றும் சீனா போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் அதிகளவில் கல்வி நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு வருகை தருவதுடன் மருத்துவம், கலை மற்றும் பௌத்த மதம் பற்றிய பட்டப்பின் கற்கை நெறிகள் போன்ற துறைகள் அவர்கள் விரும்பிக் கற்கும் துறைகளாகும்.

நாட்டிற்குள் நுழைவதற்கான வீசா மற்றும் வீசாக்களை நீடித்தல் - 2014

| தொடர் இலக்கம் | பல்கலைக்கழகம் | நுழைவு வீசாக்கள் | வீசாக்களை நீடித்தல் |
|---|---|---|---|
| 01. | களணிப் பல்கலைக்கழகம் | 31 | 184 |
| 02. | பௌத்த மற்றும் பாளி பட்டப்பின் கற்கை நிறுவகம் | 106 | 309 |
| 03. | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 09 | 150 |
| 04. | பேராதனை பல்கலைக்கழகம் | 17 | 195 |
| 05. | மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | - | 19 |
| 06. | ருஹுணு பல்கலைக்கழகம் | 178 | 76 |
| 07. | கொழும்புப் பல்கலைக்கழகம் | 41 | 103 |
| 08. | ரஜரட்ட பல்கலைக்கழகம் | 05 | 6 |
| 09. | ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் | - | 17 |
| 10. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 02 | 1 |
| 11. | சப்ரகமுவ பல்கலைக்கழகம் | - | 3 |
| 12. | திறந்த பல்கலைக்கழகம் | - | 2 |
| 13. | தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | - | 8 |
| **மொத்தம்** | | **390** | **1073** |

**பல்வேறு பட்டப் பாடநெறிகளைக் பயிலுவதற்காக பல்கலைக்கழகங்களில் பதிவு செய்துகொண்ட வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை – 2014**

| | பட்டப் பாடநெறிகள் | மாணவர்களின் எண்ணிக்கை | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|
| இளமாணிப் பட்டம் | மருத்துவம் | 206 | றுஹுணு பல்கலைக்கழகம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br>களணிப் பல்கலைக்கழகம்<br>ரஜரட்ட பல்கலைக்கழகம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| | கலை | 8 | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br>பேராதனை பல்கலைக்கழகம் |
| | ஏனையவை | 07 | களணிப் பல்கலைக்கழகம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br>பேராதனை பல்கலைக்கழகம்<br>ரஜரட்ட பல்கலைக்கழகம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| முதுமாணிப் பட்டம் | பௌத்த மற்றும் பாளி கற்கைகள் | 122 | பௌத்த மற்றும் பாளி பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்<br>களணிப் பல்கலைக்கழகம்<br>பேராதனை பல்கலைக்கழகம்<br>பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் |
| | கலை முதுமாணிப் பட்டம் | 14 | றுஹுணு பல்கலைக்கழகம்<br>பேராதனை பல்கலைக்கழகம்<br>பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் |
| | ஏனையவை | 33 | களணிப் பல்கலைக்கழகம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br>பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்<br>பேராதனை பல்கலைக்கழகம் |

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

2014.01.01 முதல் 2014.12.31 வரை வருடத்தினுள் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) சம்பந்தமான தகவல்கள்

- 2014 ஆம் ஆண்டில் இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசாங்கம் மற்றும் கட்டார் இராச்சியத்தின் அரசாங்கத்துக்கிடையே மாத்திரம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று (MOU) கைச்சாத்திடப்பட்டது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்றிய விபரம்**

| | புரிந்துணர்வு ஒப்பந்தம் | கைச்சாத்திடப்பட்ட திகதி | செல்லுபடியாகும் காலம் | உத்தேச அலுவல்கள் | முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| 01. | இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசாங்கம் மற்றும் கட்டார் இராச்சியத்தின் அரசாங்கத்துக்கிடையே கல்வி, உயர் கல்வி மற்றும் விஞ்ஞான ஆய்வுத் துறை சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | **2014.02.21** | 03 வருட காலத்திற்கு | • ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி அல்லது ஆரம்ப நிலைக் கல்விக்கான புலமைப் பரிசில் அல்லது பகுதி புலமைப் பரிசில்களுக்கான ஒதுக்கீடுகள்.<br>• ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான ஆற்றல்களைப் பரிசீலித்தல். | 2014 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. |

2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 2014 ஆண்டிலும் செயற்படுத்தப்பட்டதுடன் செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் பிரகாரம் மாலைத் தீவு, வியட்னாம், சீனா போன்ற நாடுகள் மற்றும் இலங்கை இதன் மூலம் பயன்பெற்றன.

# உயர் கல்வி அமைச்சு
## அபிவிருத்திப் பிரிவு - அலுவல் பட்டியல்

| இலக்கம் | பெயர் | விடயஇலக்கம் | பதவி | சேவைக் காலம்(அபிவிருத்திப் பிரிவு) | அலுவல் பட்டியல் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமதி நீத்தா செனெவிரத்ன | ருனு.ீ.01 | அ.மு. உ 1 | 2010.06.13 முதல் இதுவரை | பல்கலைக்கழகத்துக்குரிய காணிகள் சம்பந்தமான கோப்புக்களின் அலுவல்கள் மற்றும் மேற்பார்வை பிரிவுக்குத் தேவையான எழுதுபொருட்களைப் பெற்று விநியோகித்தல் பிரிவு ஆளணியின் மேற்பார்வை மற்றும் தபால் பிரிவின் வரவுப் பதிவேடு மற்றும் விடுமுறைப் பதிவேட்டைப் பேணி வரல் கவிதா நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் பல்கலைக்கழகங்களுக்குரிய பிரச்சினைகள் தொடர்பான கோப்புக்களை மேற்பார்வை செய்தல் |
| 2 | திருமதி ஆர்.மது'ானி பண்டார | ருனு.ீ.02 | மு.உ. ழேுனு நுளு | 2012.01.10 முதல் இது வரை | மும்மொழி இலங்கை" நிகழ்ச்சித் திட்டம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்துடன் சம்பந்தமான சகல அலுவல்கள், பட்டச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் இணையாக்கும் நடவடிக்கைகள். |
| 3 | திரு. அமல் அபேசேக்கர | ருனு.ீ.03 | அ.மு. உ 1 | 2011.01.01 முதல் 2015.04.21 வரை | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துடன் தொடர்பான அலுவல்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் கீழான விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளை வெளியிடல் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைந்த நிறுவனங்களின் முகாமைத்துவ சபைகள் மற்றும் நிர்வாக சபைகளுக்குரிய அங்கத்தவர்களின் பெயர்களை முன்மொழியும் நடவடிக்கைகள் இந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வரும் வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் வீசா சம்பந்தமான அலுவல்கள். |
| 4 | செல்வி டப்ளியு.டீ.எம்.சோவிஸ் | ருனு.ீ.04 | அபி.உ | 2012.09.03 முதல் 2014.09.25 வரை | கவிதா நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பான செலுத்துகைகள் சம்பந்தமான அலுவல்கள். பல்கலைக்கழகத் துறையுடன் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதி செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் கிடைக்கப்பெறும் கடிதங்கள் சம்பந்தப்பட்ட அலுவல்கள். |

| இலக்கம் | பெயர் | விடயஇலக்கம் | பதவி | சேவைக் காலம்(அபிவிருத்திப் பிரிவு) | அலுவல் பட்டியல் |
|---|---|---|---|---|---|
| 5 | திருமதி ரசாங்கிகா குணவர்தன | ருனு.∵05 | அ.மு.உ_11 | 2009.11.10 முதல் 2015.02.02 வரை | வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பங்களை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்<br>- மொரட்டுவைப் பல்கலைக்கழகம்<br>- தொழில்நுட்ப நிறுவனம்<br>- கணனித் தொழில்நுட்ப நிறுவனம்<br>உள்நாட்டு நிதியம் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஈட்டும் நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல் |
| 6 | திருமதி எம்.ஏ.ஆர்.தீப்த்திக்கா | ருனு.∵06 | அபி.உ | 2011.08.07<br>(2013.09.23-2014.04.07 பிரசவ விடுமுறை) | பல்கலைக்கழக வேந்தர்கள் மற்றும் உப வேந்தர்களை நியமித்தல்<br>கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் அந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பட்டப்பின் கற்கை நிறுவனங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பங்களை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்.<br>வழக்குகள், மனித உரிமை மீறல்கள் மற்றும் குறைகேள் அதிகாரி அலுவலகக் கடிதங்களுக்கு பதில் அளித்தல்.<br>உள்நாட்டு நிதியம் மற்றும் பல்கலைக்கழகம் ஈட்டும் நிதியத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல் |
| 7 | திரு.சுரங்க வர்ணசூரிய | ருனு.∵07 | அபி.உ | 2012.03.26 முதல் 2014.02.வரை | வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பங்களை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்<br>- களணிப் பல்கலைக்கழகம்<br>- திறந்த பல்கலைக்கழகம்<br>- கம்பஹா விக்கிரமாரச்சி ஆயர்வேத கற்கை நிறுவகம்<br>- பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்<br>- அழகியற்கலை பல்கலைக்கழகம்<br>- விவசாய பட்டப்பின் கற்கை நிறுவனம்<br>- தொல்பொருளியல் பட்டப்பின் கற்கை நிறுவனம்<br>- பாளி மற்றும் பௌத்த பட்டப்பின் கற்கை நிறுவகம்<br>- புத்த சிராவக்க பிக்குகள் பல்கலைக்கழகம்<br>உள்நாட்டு நிதியம் மற்றும் பல்கலைக்கழகம் ஈட்டும் நிதியத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல் |

| இலக்கம் | பெயர் | விடயஇலக்கம் | பதவி | சேவைக் காலம்(அபிவிருத்திப் பிரிவு) | அலுவல் பட்டியல் |
|---|---|---|---|---|---|
| 8 | செல்வி மேன்'ாத சொய்ஸா | ருனு.˙.08 | அபி.உ | 2011.07.01 முதல் இதுவரை | இலங்கைக்கும் வெளிநாடுகளுக்குமிடையிலான கைச்சாத்திடப்படும் இருதரப்பு ஒப்பந்தங்களுடன் தொடர்பான அலுவல்கள்<br>அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்குரிய காணிகள் சம்பந்தமான அலுவல்கள்<br>வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பங்களை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்<br>- பேராதனை பல்கலைக்கழகம்<br>- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>- ரஜரட்ட பல்கலைக்கழகம்<br>உள்நாட்டு நிதியம் மற்றும் பல்கலைக்கழகம் ஈட்டும் நிதியத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல் |
| 9 | திருமதி எஸ்.என்.எம்.செனெவிரத்ன | ருனு.˙.09 | அபி.உ | 2013.11.23 முதல் இதுவரை | வெளிநாட்டு விடுமுறை விண்ணப்பங்களை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல்<br>- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்<br>- முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவனம்<br>- றுஹுணு பல்கலைக்கழகம்<br>- கிழக்குப் பல்கலைக்கழகம்<br>- தென் கிழக்குப் பல்கலைக்கழகம்<br>- ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்<br>- வயம்ப பல்கலைக்கழகம்<br>- சப்ரகமுவ பல்கலைக்கழகம்<br>உள்நாட்டு நிதியம் மற்றும் பல்கலைக்கழகம் ஈட்டும் நிதியத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல் |
| 10 | திரு.ரீ.எம்.அசங்க சஞ்சீவ | குயு.˙.01 | அபி.உ | 2012.09.03 முதல் இதுவரை | வெளிநாட்டு முதுமாணிப் பட்டம் தொடர்பான அலுவல்கள்<br>வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் வெளியுறவு அமைச்சின் ஊடாக கனிடக்கப்பெறும் குறுகிய கால பயிற்சிப் பாடநெறிகள் சம்பந்தமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் ஆளணியை அறிவுறுத்தல் மற்றும் உரிய நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் பெயர்களை மீண்டும ˙வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்தல். |

| இலக்கம் | பெயர் | விடயஇலக்கம் | பதவி | சேவைக் காலம்(அபிவிருத்திப் பிரிவு) | அலுவல் பட்டியல் |
|---|---|---|---|---|---|
| 11 | திரு.எஸ்.பீ.என். அமரதுங்க | குயு.்.03 | அபி.உ | 2011.08.01 முதல் இதுவரை | வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் இளமாணிப் பட்டப் புலமைப் பரிசில்கள் சம்பந்தமான சகல நடவடிக்கைகள் |
| 12 | திருமதி ஹர்ஸி குமாரபேலி | குயு.்.02 | அபி.உ | 2009.04.27 முதல் இதுவரை | இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்களுக்குரிய சகல அலுவல்கள்<br>- கொழும்பு பல்கலைக்கழகம் - கணனி தொழில்நுட்ப நிறுவகம்<br>- களணிப் பல்கலைக்கழகம்<br>- தொல்பொருளியல் பட்டப்பின் கற்கை நிறுவனம்<br>- பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்<br>- மொரட்டுவைப் பல்கலைக்கழகம்<br>- பேராதனை பல்கலைக்கழகம்<br>- விவசாய பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் |
| 13 | திருமதி அனு்கா அபேகோன் | குயு.்.04 | அபி.உ | 2014.01.01முதல் இதுவரை | வெளிநாட்டு மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கீழ் குறிப்பிடப்படும் பல்கலைக்கழகங்களுக்குரிய சகல அலுவல்கள்<br>- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>- றுஹுணு பல்கலைக்கழகம்<br>-இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்<br>- ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 14 | திருமதி இந்தீவரீ ஜயகொடி | ருனு.். | அபி.உ | 2013.08.08 முதல் இது வரை (2014.05.22-2015.03.10 பிரசவ விடுமுறை) | ருனு 06 திருமதி தீப்திக்காவின் பிரசவ விடுமுறை காலத்தில் பதிற் கடமை |

## அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு - உயர் கல்வி அமைச்சு

**அறிமுகம்**

ஆசியாவில் மிக உயர்ந்த எழுத்தறிவு மட்டத்தில் இருக்கும் இலங்கைச் சமூகத்தில் கல்வி சம்பந்தமான சாதகமான மனப்பாங்குகள் நிலவுவதனால் உயர் கல்விக்கான பாரிய கேள்வியை அரசதுறையைச் சேர்ந்த உயர் கல்வி நிறுவகங்களினால் ஈடு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. அதற்கான மாற்று வழியாக அரச சார்பற்ற பல்கலைக்கழகத்துறையின் ஊடாக உயர் கல்விக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான முக்கியத்துவத்தினை கவனத்திற் கொண்டு உயர் கல்வி அமைச்சினால் எடுக்கப்பட்ட கொள்கை அடிப்படையிலான தீர்மானத்தின் அடிப்படையில் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் நேரடியாக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதற்கமைய 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு நிறுவப்பட்டு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் கட்டளைச் சட்டத்தின் 25 ஏ சரத்தின் ஏற்பாடுகளுக்கமைய அதன் நிரந்தர அதிகாரியாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரிவு மேலதிக செயலாளர் ஒருவரின் கீழ் இயங்குகின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 70 ‘இ’ மற்றும் 70 ‘ஈ’ சரத்துக்களுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 137 ஆவது சரத்தின் பிரகாரம், 2013 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1824∴21 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலி‘க் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்படுத்தப்பட்ட 2013 இன் 1 ஆம் இலக்க ஒழுங்கு விதிகளுடன் தொடர்பான உறுதியாக அறிந்துகொள்ளப்பட்ட பட்டமொன்று ∴ பட்டமொன்றை வழங்கும் நிறுவனமாக ஏதேனும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனமொன்றை எற்றுக்கொள்வதற்கு, அந்த நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் விண்ணப்பங்களின் மீளாய்வு நடவடிக்கைகள் தொடக்கம் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான கட்டளையைப் பிறப்பித்தல் வரையிலான நடவடிக்கைகள் முக்கியமாக இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளில் நிச்சயித்துக் கூறப்பட்டுள்ள அலுவல்கள் சம்பந்தமாக தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக தகைமை மற்றும் தர உறுதிப்பாடு சம்பந்தமான நிலையான குழு (ளு.ஊ.யு.ஞ.யு) அமைக்கப்பட்டது. அக் குழுவினால் ஏற்புடைத்தாகும் கொள்கைகள் மற்றும் தேவையான நிர்வாக ரீதியிலான பரிந்துரைகளை ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய முன்வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. 2014 டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 1891/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலி‘க் குடியரசின் அதி விசேட வர்த்தமானி ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிரந்தர அதிகாரிக்குரிய ஒழுங்கு விதிகளில் 31 ஆம் ஒழுங்கு விதி மீதான திருத்தம் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

## அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் அலுவல்கள்

01. தகைமை மற்றும் தர உறுதிப்பாடு சம்பந்தமான நிலையான குழுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், நடாத்துதல் மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்தல்
02. பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரங்களை வேண்டி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பான ஆரம்ப மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் அது சம்பந்தமான ஏனைய அலுவல்கள்
03. பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரங்களை வேண்டி விண்ணப்பங்களை முன்வைத்துள்ள நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வு நடவடிக்கைகளுக்கான மீளாய்வுக் குழுவை நியமித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
04. பட்டங்களை வழங்குவதற்கான அதிகாரம் கிடைக்கப்பெற்ற நிறுவனங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமான தகவல் தொகுதியை பேணி வரல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் மற்றும் இற்றைப்படுத்தல்.
05. பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய தேவைகளை அந்த நிறுவனங்கள் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்தல்.
06. வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்கள் ஊடாக சான்றிதழ்களை வழங்குவதற்காக உள்நாட்டு உயர் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் பாடநெறிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் தொகுதியைப் பேணி வரல் மற்றும் இற்றைப்படுத்தல்.
07. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டம் - உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பான பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
08. உயர் கல்வி நிறுவகங்களில் பயிலும் வெளிநாட்டு மாணவர்களின் வீசாக்களுக்கான பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
09. உள்நாட்டு மாணவர்கள் வெளிநாட்டில் உயர் கல்விக்காகச் செல்லுதல் சம்பந்தமான தகவல்கள் தொகுதியைப் பேணி வரல் மற்றும் இற்றைப்படுத்தல்.
10. குழுக்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்கான செலுத்துகைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
11. அமைச்சின் நிர்வாகம் மற்றும் திட்டமிடல் பிரிவுடன் இணைந்து அலுவலக நிர்வாகம் மற்றும் அதனோடு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கைப்படுத்தல்.

### 1. தகைமை மற்றும் தர உறுதிப்பாடு சம்பந்தமான நிலையான குழு

மேற்கூறப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கிடைக்கப்பெறும், பட்டங்களை வழங்குவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தாபன ரீதியான மீளாய்வுக் குழு மற்றும் விடய மீளாய்வுக் குழு என இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அக்குழுக்கள் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்களில், பட்டத்தை வழங்குவதற்கான அதிகாரத்தை வேண்டி நிற்கும் பட்டத்தின் அடிப்படையில் மீளாய்வுக் குழுவின் அமைப்பு வேறுபடும். இந்தக் குழுவானது விடயம் பற்றிய பரந்த அறிவு மற்றும் தெளிவுடைய சிரே'ட விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் சிரே'ட அரச உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் கட்டளையின் பிரகாரம் அமைச்சரால் உயர் கல்வி அமைச்சின் செயலாளரை குறித்துரைக்கப்பட்ட அதிகாரியாக நியமித்ததன் பின்னர் அவர் பட்டங்களை வழங்கும் நிறுவனங்களை சிபாரிசு செய்வதற்காக தகைமை மற்றும் தர உறுதிப்பாடு சம்பந்தமான நிலையான குழுவின் உறுப்பினர்களாக கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை நியமித்துள்ளார்.

1. கலாநிதி திரு.சுனில் ஜயந்த நவரத்ன, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர். (குழுத் தலைவர்)
2. திரு. டக்ளஸ் நாணாயக்கார(இலங்கை நிருவாக சேவை – விசேட தரம்) மேலதிக செயலாளர், உயர் கல்வி அமைச்சு. (குழு உறுப்பினர்)
3. பேராசிரியர் திரு.சன்ஜித் சேனாரத்ன, உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு. (குழு உறுப்பினர்)
4. பேராசிரியர் திரு.ரொஹான் ராஜபக்‘, சிரே்‘ட பேராசிரியர், ருஹுணு பல்கலைக்கழகம் (குழு உறுப்பினர்)
5. கலாநிதி திரு.ஆர்.எம்.கே.ரத்னாயக்க, பணிப்பாளர், உயர் கல்வி அமைச்சின் ஹேயுளு செயல் திட்டம் (குழு உறுப்பினர்)
6. திருமதி பமோதா ராஜகீய, சட்ட உத்தியோகத்தர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு. (குழு உறுப்பினர்)

ஏற்புடைத்தாகும் ஆண்டில் தகைமை மற்றும் தர உறுதிப்பாடு சம்பந்தமான நிலையான குழுக் கூட்டங்கள் 9 நடாத்தப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் கீழ் தகைமை மற்றும் தர உறுதிப்பாடு சம்பந்தமான நிலையான குழு அதற்குரிய அலுவல்களை மேற்கொள்ளும்.

(அ) அரச சார்பற்ற உயர் கல்வியுடன் தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் சம்பந்தமாக குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்.

(ஆ) மீளாய்வு சபையை நியமிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்.

(இ) மீளாய்வு சபையினால் வழங்கப்பட்ட சிபாரிசு அறிக்கை சம்பந்தமாக குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்.

(ஈ) மாதாந்தம் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழிற் கல்வி நிறுவனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(உ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் முன்வைக்கப்படும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் எழும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து சிபாரிசுகளை முன்வைத்தல்.

2014 ஆம் ஆண்டில் பட்டங்களை வழங்குவதற்கான அனுமதி வேண்டி கிடைக்கப்பெற்ற 17 விண்ணப்பங்கள் சம்பந்தமான ஆரம்ப மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றில் 9 விண்ணப்பங்கள் முன்னைய ஆண்டில் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாகும். 8 விண்ணப்பங்கள் 2014 ஆம் ஆண்டில் பட்டங்களை வழங்குவதற்கான அனுமதி வேண்டி முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களாகும். பட்டங்களை வழங்குவதற்கான அனுமதி வேண்டி விண்ணப்பங்களை முன்வைத்துள்ள நிறுவனங்கள் சுமார் 77 பாடநெறிகளுக்காக விண்ணப்பித்துள்ளன.( கலாநிதிப் பட்டம், இளமாணிப் பட்டம், பட்டப்பின் டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் டிப்ளோமா போன்ற பாடநெறிகளாகும்)

**அட்டவணை - 1.1 - 2014 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள்**

| நிறுவனம் | பாடநெறி | அனுமதி வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| சணச கெம்பஸ் லிமிடட் (SANASA Campus) | வங்கியியல் மற்றும் நிதியியல் சம்பந்தமான விஞ்ஞானமாணி(சிறப்பு) பட்டம் | 2014.01.21 ஆம் திகதிய 1890/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி |
| | காப்புறுதி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான (சிறப்பு) பட்டம் | |
| | மண்டல அறிவியல் மற்றும் திட்டமிடல் சம்பந்தமான (சிறப்பு) பட்டம் | |
| ஹொரய்சன் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் என்ட் டெக்னோலொஜி பிரைவட் லிமிடட் (Horizon Campus) | வணிக முகாமைத்துவ அறிவியல் பட்டம்(மனித வள முகாமைத்துவம்) | 2014.11.26 ஆம் திகதிய 1846/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி |

2104 ஆம் ஆண்டில் காட்சு இண்டர்நெ'னல் யுனிவர்சிட்டி(KAATSU) நிறுவனம் தொடர்பான தாபன ரீதியான மீளாய்வு மற்றும் விடய ரீதியான மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
மேலும், கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வுக் குழு அறிக்கைக்கான சிபாரிசுகளை பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

1. இன்டர்நெ'னல் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னோலொஜி (ICBT Campus) - (தாபன ரீதியான மீளாய்வு நடவடிக்கைகள்)

2. அக்வைனாஸ் யுனிவர்சிட்டி கொலேஜ் (Aquinas University College) - (விவசாயத்துறை முகாமைத்துவம், விவசாயம் சம்பந்தமான விஞ்ஞானமாணி பட்டம்)

3. கலம்பு ஸ்கூல் ஒப் கன்ஸ்ட்ரக்'ன் டெக்னோலொஜி(CSCT) - (தாபன ரீதியான மீளாய்வு நடவடிக்கைகள்)

4. இன்ஸ்டிடியூட் ஒப் பேன்கஸ் (IBSL) (தாபன ரீதியான மீளாய்வு நடவடிக்கைகள்)

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களில் ஆரம்ப மீளாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக தாபன ரீதியான மீளாய்வு அல்லது விடய ரீதியான மீளாய்வுக்காக பொருத்தமான வகையில் குழு நியமிக்கப்பட்டது.

1. ரெபல்ஸ் யுனிவர்சிட்டி(Raffles University)
2. சவுத் ஏசியன் இன்ஸ்டிடியுட் ஒப் டெக்னொலொஜி என்ட் மெடிசீன் (SAITM)
3. சீகீஸ் கெம்பஸ் (SEAGIS CAMPUS)
4. தேசிய வணிக முகாமைப் பாடசாலை (NSBM)
5. நாகானந்த சர்வதேச பௌத்த பல்கலைக்கழகம்(Nagananda International Buddhist Academy)
6. இலங்கை சர்வதேச பௌத்த அகடமி (SIBA)

அத்துடன் 2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் கீழ் குறிப்பிடப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக ஆரம்ப மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. கலம்பு இன்டர்நெ'னல் நோடிக்கல் என்ட் இன்ஜினியரின் கொலேஜ்(பிரைவட்)லிமிடட் நிறுவனம் (CINEC)

2. ஶ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் இன்போமேசன் டெக்னோலொஜி(கெரண்ட)லிமிடட் (SLIIT)

3. நளீமியா இன்ஸ்டிடியுட் ஒப் இஸ்லாமிக் (Naleemiah Institute of Islamic Studies)

4. விக்டோரியா ஹயர் எடியுகே'ன் கெம்பஸ் (Victoria Higher Education Campus)

**<u>02. அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்கள் சம்பந்தமான தகவல்கள் தொகுதியை பேண் வரல்</u>**

2.1 பட்டங்களை வழங்கும் அதிகாரங்களைப் பெற்ற நிறுவனங்களின நடவடிக்கைகளை கண்காணிப்பதனை நோக்காகக்கொண்டு அந்த நிறுவனங்களின் பாடநெறிகள், மாணவர்கள் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கிய வகையில் இந்தப் பிரிவின் ஊடாக தகவல் தொகுதியொன்றை பேண் வரல் மற்றும் பின்னூட்டல் மற்றும் இற்றைப்படுத்தல் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பட்டங்களை வழங்கும் அதிகாரங்களைப் பெற்ற நிறுவனங்களில் 2014 ஆம் ஆண்டு கல்வி கற்ற மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை - 2.1 - பட்டங்களை வழங்கும் அதிகாரங்களைப் பெற்ற நிறுவனங்களின் மாணவர்களின் எண்ணிக்கை

| | நிறுவனம் | மாணவர் எண்ணிக்கை (பட்டம் வழங்குவதற்கு அனுமதிக்கப் பட்டுள்ள பாடநெறிகள்) | மாணவர் எண்ணிக்கை( ஏனைய பாடநெறிகள்) | மாணவர் எண்ணிக்கை (பல்கலைக்க ழகங்கள் ஊடாக வழங்கப்படும் பாடநெறிகள்) |
|---|---|---|---|---|
| 01 | இன்ஸ்டிடியுட் ஒப் டெக்னொலொஜி ஸ்டடீஸ் | தற்போது செயற்படுவதில்லை. | | |
| 02 | அளவையியல் மற்றும் வரைபட நிறுவனம் | 2012/2013 கல்வியாண்டுக்காக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. | 45 | - |
| 03 | ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் இன்போமேசன் டெக்னோலொஜி(கெரண்ட)லிமிடட் (ளுடுஐஐவு) | 5608 | - | - |
| 04 | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (ளுடுஐனுயு) | 134 | 1188 | - |
| 05 | தேசிய மீன்பிடி மற்றும் சமுத்திரப் பொறியியல் நிறுவனம் | 214 | 130 | - |
| 06 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் | 387 | 569 | - |
| 07 | அக்வைனாஸ் உயர் கல்வி நிறுவகம் | 454 | 27 | 195 |
| 08 | சவுத் ஏசியன் இன்ஸ்டிடியுட் ஒப் டெக்னொலொஜி என்ட் மெடிசீன் பிரைவட் லிமிடட் (ளுயுஐவுஆ) | 664 | 34 | 555 |
| 09 | தேசிய வணிக முகாமைப் பாடசாலை (ளேடீஆ) | 664 | 20927 | 1919 |
| 10 | கலம்பு இன்டர்நெ'னல் நோடிக்கல் என்ட் இன்ஜினியரின் கொலேஜ்(பிரைவட்)லிமிடட் நிறுவனம் (ஊஐநேஊ) | 210 | - | 660 |
| 11 | இலங்கை சர்வதேச பௌத்த அகடமி (ளுஐடீயு) | 132 | 5 | 31 |
| 12 | இலங்கை பட்டயக் கணக்காளர்களின் சங்கம் (ஐஊயுளுடு) | 23 | 50310 | 90 |
| 13 | சணச கெம்பஸ் லிமிடட் (ளுயுயேளுயுஊயஅிரள) | 49 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | ஹொரய்சன் கொலேஜ் ஒப் பிஸ்னஸ் என்ட் டெக்னோலொஜி பிரைவட் லிமிடட் (ர்ழசணைழ ஊயஅிரள) | 2014.11.26 ஆம் திகதி பட்டங்களை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள் ளது. | 17 | 183 |
| | **மொத்தம்** | **8539** | **73252** | **3633** |

2.2 அரச சார்பற்ற உயர் கல்வித் துறையில் உயர் கல்விக்கான வாய்ப்புக்கள்

அரச சார்பற்ற உயர் கல்வித் துறையில் உயர் கல்விக்கான தேவைகள் நிலவும் மாணவர்களுக்கு அதற்கான உயர் கல்வி வாய்ப்புக்கள் சம்பந்தமான தரவுகளைச் சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது வெளிநாட்டு உயர் கல்வி நிறுவகங்களினால் வழங்கப்படும் சான்றிதழ்களுக்காக தேசிய உயர் கல்வி நிறுவகங்களில் கல்வி கற்பதற்காக அந்த நிறுவகங்களில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்த நிறுவகங்களின் விபரங்கள் போன்ற தரவுகளைக் கொண்டதாக இருக்கும். அத்துடன் இங்கு தொழிற் பயிற்சி சம்பந்தமான தரவுகளும் சேர்க்கப்படும். 2014 ஆண்டில் நிலவிய அந்தத் தரவுகளின் பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை - 2.2 - பட்டங்களை வழங்கும் அதிகாரங்களைப் பெற்ற 62 நிறுவனங்களது மாணவர்களின் எண்ணிக்கை

| பாடநெறி வகைகள் | பாடநெறிகளின் எண்ணிக்கை | | மாணவர்களின் எண்ணிக்கை | | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | தேசிய சான்றிதழ்களுக்கான பாடநெறிகள் | வெளிநாட்டு சான்றிதழ்களுக் கான பாடநெறிகள் | தேசிய சான்றிதழ்களுக்கான பாடநெறிகள் | வெளிநாட்டு சான்றிதழ்களுக் கான பாடநெறிகள் | |
| அடிப்படை.:.சான்றிதழ்.:. தொழில்சார் பாடநெறிகள் | 35 | 14 | 3091 | 17794 | 20885 |
| டிப்ளோமா | 103 | 89 | 6817 | 3402 | 10219 |
| பட்டப் பாடநெறிகள் | 35 | 14 | 3091 | 17794 | 20885 |
| முதுமாணி.:. பட்டப்பின் கற்கைப் பாடநெறிகள் | 14 | 6 | 861 | 210 | 1071 |
| முதுகலைமாணி.:. முதுவிஞ்ஞான மாணி | 6 | 34 | 570 | 1503 | 2073 |
| கலாநிதிப் பட்டம் | 1 | 1 | 6 | 62 | 68 |
| மொத்தம் | **186** | **234** | **12353** | **25912** | **38265** |

**03.கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கான தேசிய செயல் திட்டம் - உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பான பரிந்துரைகளைச் செயற்படுத்துவதனை ஒருங்கிணைத்தல்.**

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு தொடர்பாக முன்வைத்திருக்கும் பரிந்துரைகளான,

பரிந்துரை 01 - ஆற்றல்களின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளும் முறையொன்றினை அறிமுகப்படுத்தும் நோக்கில் பங்கு முறை பற்றி மீளாய்வு செய்வதற்காக கற்றறிந்தோர் குழுவொன்றை நியமித்தல்.

பரிந்துரை 02 - அரச பல்கலைக்கழகங்களில் பல்லின மாணவர்கள் கற்பதையும் மும்மொழிகளிலும் பாடநெறிகளைக் கற்பித்தலை மற்றும் அவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் இருத்தலையும் உறுதிப்படுத்தல்.

பரிந்துரை 02 இன் பிரகாரம், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழு கீழ் குறிப்பிடப்படும் சிபாரிசுகளை முன்வைத்துள்ளது.

1. பல்கலைக்கழகங்களுக்கிடையே மாணவர் மற்றும் கல்விசார் ஆளணியைப் பரிமாறிக்கொள்ளும் வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்தல்.
2. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது தமது தாய் மொழி அல்லாத மேலதிக திறமையைக்காட்டும் சிங்களம் ∴ தமிழ் மொழி தேர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல்.
3. அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மும்மொழிகளிலும் பட்டப் பாடநெறிகளை ஆரம்பித்தல்.
4. தேசிய ஒருமைப்பாடுகள் சம்பந்தமான விடயத்தை அனைத்துப் பட்டப் பாடநெறிகளிலும் பிரதான பாடமாக உட்படுத்தல்.
5. க.பொ.த(சா.த) மற்றும் க.பொ.த(உ.த) பரீட்சைகளுக்கு சிங்களம் மற்றும் தமிழ் போன்ற இரு மொழிகளிலும் குறிப்பிட்ட பரீட்சையில் தோற்றுவதற்கு ஏற்புடைத்தகும் பரீட்சை நிபந்தனைகளை மாற்றியமைத்தல்.
6. பல்லினப் பாடசாலைகளை அமைப்பதளை விருத்தி செய்தல்.

அறிவிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் முன்னேற்றம் தொடர்பாக நிதமும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு பல்கலைக்கழகங்களுக்கும் ஒரு பிரதிநிதி வீதம் நியமிக்கப்பட்டு அந்த அறிக்கைகளை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

**04. அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்களில் பயில்வதற்கு வரும் வெளிநாட்டு மாணவர்களுக்கான வீசா அனுமதிப்பத்திரங்களுக்கான சிபாரிசை வழங்கும் நடவடிக்கை**

வெளிநாடுகளில் இருந்து இந்த நாட்டு அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்களில் உயர் கல்வி கற்பதற்காக இலங்கைக்கு வரும் மாணவர்களுக்கு நாட்டிற்குள் நுழைவதற்கான மற்றும் இங்கு தங்கியிருப்பதற்கான வீசா அனுமதிப் பத்திரங்களை உயர் கல்வி அமைச்சு சிபாரிசு செய்து குடிவரவு மற்றும் குடியயகல்வுத் திணைக்களத்திற்கு அனுப்பும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக வீசா அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகங்களின் தகவல்கள் அடங்கிய சட்ட ரீதியான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இந்தப் பிரிவில் பாதுகாப்பாக வைக்கப்படும். சிபாரிசைப்

பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிவம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை ஒப்படைத்தல் வேண்டும். அதற்கமைய, 2014 ஆம் ஆண்டில் 152 மாணவர்களுக்கான வீசா அனுமதிப் பத்திரங்களுக்கு இந்தப் பிரிவினால் சிபாரிசு பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அட்டவணை - 4.1 – 2014 ஆம் ஆண்டில் நாட்டிற்குள் நுழைவதற்கான மற்றும் இங்கு தங்கியிருப்பதற்கான வீசா அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் பற்றிய விபரம்.

| இல: | வெளிநாடு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஆப்கானிஸ்தான் | 3 |
| 02 | அவுஸ்த்திரேலியா | 2 |
| 03 | பங்களாதே‘ | 7 |
| 04 | பூட்டான் | 1 |
| 05 | பிரேசில் | 1 |
| 06 | கனடா | 1 |
| 07 | சீனா | 1 |
| 08 | கொன்கோவா | 1 |
| 09 | ஜேர்மன் | 1 |
| 10 | பீஜி | 1 |
| 11 | கானா | 1 |
| 12 | இந்தியா | 10 |
| 13 | ஜப்பான் | 3 |
| 14 | கசகஸ்தான் | 1 |
| 15 | கென்யா | 2 |
| 16 | கொரியா | 16 |
| 17 | மலேசியா | 9 |
| 18 | மியன்மார் | 1 |
| 19 | நேபாளம் | 4 |
| 20 | நைஜீரியா | 29 |
| 21 | ஓமான் | 13 |
| 22 | பாகிஸ்தான் | 5 |
| 23 | போர்த்துக்கல் | 1 |
| 24 | ர‘யா | 2 |
| 25 | ஸ்பெயின் | 1 |
| 26 | துருக்கி | 16 |
| 27 | உகண்டா | 4 |
| 28 | இங்கிலாந்து | 10 |
| 29 | சீசெ‘ல்ஸ் | 1 |
| 30 | தென் ஆபிரிக்கா | 1 |
| 31 | வியட்னாம் | 3 |
| | **மொத்தம்** | **152** |

## 05. இலங்கை மாணவர்கள் உயர் கல்வியின் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்தல் சம்பந்தமான தரவுத் தொகுதியொன்றினைத் தயாரித்தல்.

உயர் கல்வி அமைச்சினால் இலங்கை மாணவர்கள் உயர் கல்வி பயிலுவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லுதல் சம்பந்தமான தரவுகளைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு வெளிவிவகார அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொண்டு இந்த நாட்டில் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் கொன்சல் அலுவலகங்கள் ஊடாக தேவையான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் கொன்சல் அலுவலகங்களினால் பெற்றுத்தரப்பட்ட தரவுகளுக்கமைய 2014 ஆம் ஆண்டில் சுமார் 10,000 இலங்கை மாணவர்கள் உயர் கல்வியைப் பயிலுவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

## 06. இலங்கையில் தொழில்சார் முகாமைத்துவ கணக்கியல் துறையின் மேம்பாட்டிற்கான வசதிகளை வழங்குதல்

2014 செப்டெம்பர் 04 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்கியல் போன்ற தொழில்சார் துறைகளுக்கான கல்வி மற்றும் தொழில்துறை நிறுவனங்களினால் வழங்கப்படும் சான்றிதழ் மற்றும் அதற்குரிய தகைமைகள் சம்பந்தமாக பொது விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அவற்றை ஒரு தகைமைகள் சட்டகத்திற்குள் உட்படுத்திக்கொள்வதற்கான முறையொன்றை தயாரித்துக்கொள்வதற்காக உயர் கல்வி அமைச்சினால் அந்தத் துறையில் அனுபவம் வாய்ந்த அரசாங்கப் பல்கலைக்கழகங்களின் கற்றறிந்தோர் குழுவினால் கணக்கியல் தொழில்சார் துறையில் பாடநெறிகளை நடாத்தும் உயர் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளின் மற்றும் குறிப்பிட்ட அரச நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 07. அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவின் ஆளணி

அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் 2014 ஆம் ஆண்டில் பணியாற்றிய ஆளணி பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.
பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் முறையே 2014 செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நிரப்பப்பட்டன.

**அட்டவணை - 7.1 - ஆளணி பற்றிய விபரம்**

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 2014.12.31 ஆம் திகதியன்று ஆளணி |
|---|---|---|
| மேலதிக செயலாளர் | 01 | 01 |
| பணிப்பாளர் | 01 | 01 |
| உதவிப் பணிப்பாளர் | 01 | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் / முகாமைத்துவ உதவியாளர் | 06 | 04 |
| அலுவலக ஊழியர் | 01 | 01 |


## திட்டமிடல் பிரிவு - உயர் கல்வி அமைச்சு

இலங்கையை ஆசியாவின் புதுமையாக மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தில் உயர் கல்விக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரிக்கும்போது இந்த இலக்கினை அடைந்துகொள்வதற்காக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், பட்டதாரிகளின் தரம் மற்றும் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல், உயர் கல்விக்கான வாய்ப்பை அதிகரித்தல், இலங்கை உயர் கல்விக் கட்டமைப்பை சர்வதேச ரீதியாக உயர்ந்த மட்டத்திற்கு கொண்டுவரல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை அதிகரித்தல் போன்ற பிரதான நோக்கங்களின் கீழ் உயர் கல்வி அமைச்சின் நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சின் இந்த பிரதான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும்போது திட்டமிடல் பிரிவு விசேட அலுவலை நிறைவேற்றுகின்றது. அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய மற்றும் சர்வதேச செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அவற்றின் பெறுபேறுகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல், வரவு செலவு மதிப்பீட்டைத் தயாரிப்பதற்குத் தேவையான திட்டமிடல், அமைச்சின் செயல் திட்டம் மற்றும் கூட்டுத் திட்டத்தை தயாரித்தல், அமைச்சின் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்களின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் வருடாந்த செயலாற்றுகை மீளாய்வு அறிக்கையைத் தயாரித்தல் என்பன இவற்றில் பிரதானமானவைகளாகும்.

### வரவு செலவு மதிப்பீட்டைத் தயாரிப்பதனைத் திட்டமிடல்

உயர் கல்வித் துறைக்கு பிரதானமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு என்ற வகையில் இரண்டு வழிகளின் ஊடாக அரச நிதி ஒதுக்கப்படுகின்றது. திட்டமிடல் பிரிவின் பிரதான அலுவல் என்னவெனில், ஒதுக்கப்படும் அரச நிதி ஏற்பாடுகளின் செலவுகளை பகுப்பாய்வு செய்து எதிர்வரும் ஆண்டுகளுக்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு திட்டங்களைத் தயாரிப்பதாகும். 201 ஆம் ஆண்டில் அரசாங்கம் உயர் கல்வித் துறைக்காக 30.9 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியதுடன் உண்மையான செலவு 40.91 பில்லியன் ரூபாக்களாகும். 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான அரசாங்கம் ஒதுக்கிய நிதி எற்பாடுகள் பற்றிய விபரம் கீழுள்ள வரைபினால் காட்டப்பட்டுள்ளது.




*இந்த செலவினுள் 2013 ஆண்டின் நிலுவைப் பற்றுச் சீட்டுக்களை செலுத்தித் தீர்ப்பதற்காக திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களைப் போன்றே அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இரண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்பனவற்றின் செலவு பற்றிய விபரமும் இதற்குள் அடங்கும்.

அமைச்சின் திட்டமிடல் பிரிவின் ஊடாக வரவு செலவு நிதி ஏற்பாடுகளின் செலவுகள் கண்காணிக்கப்படுவதுடன் இந்த கண்காணிப்பின் பின்னூட்டல் நடவடிக்கையாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதனையும் பிரதான அலுவலாகக் குறிப்பிட முடியும்.

**<u>கண்காணிக்கும் செயல் திட்டங்கள்</u>**

உயர் கல்விக் கட்டமைப்பில் செயற்படுத்தப்படும் அபிவிருத்திச் செயல் திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவை உரிய கால எல்லை மற்றும் செலவு மதிப்பீட்டினுள் அடைந்துகொள்வது எந்தளவுக்கு சாத்தியம் என்பதனை காலாண்டு ரீதியாக மேற்கொள்ளப்படும் செயல் திட்டம் சம்பந்தமான ஒழுங்குமுறைப்படுத்தலும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் இன்னுமொரு பிரதான அலுவலாகும். இதன் கீழ் உள்நாட்டு நிதி மூலம் செயற்படுத்தப்படும் 157 செயல் திட்டங்களும் வெளிநாட்டு நிதியம் மூலம் செயற்படுத்தப்படும் 10 செயல் திட்டங்களும் 2014 ஆம் ஆண்டில் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டது.
2014 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயல் திட்டங்கள் சம்பந்தமான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

| நிறுவனம் | செயல் திட்டங்களின் எண்ணிக்கை | அரசாங்க நிதி(மில்.ரூ.) | செலவு(மில்.ரூ.) |
|---|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | **155** | **6,566.68** | **4,649.36** |
| அமைச்சு | **12** | **6,330.26** | **6,282.77** |
| உள்நாட்டு நிதியத்தினால் செயற்படுத்தப்படுபவை | 02 | 4,753.00 | 4,778.8 |
| வெளிநாட்டு நிதியத்தினால் செயற்படுத்தப்படுபவை | 10 | 1,577.26 | 1,503.97 |
| மொத்தம் | **167** | **12,896.94** | **10,932.13** |

ஒவ்வொரு நிறுவன மட்டத்திலும் காலாண்டு ரீதியாக தகவல்களைப் பெற்று அரசாங்க முதலீட்டுக்காக ஒதுக்கிய வளங்கள் பயன்மிக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா? என காலாண்டு ரீதியாக ஒழுங்குமுறைப்படுத்தல்இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அத் தகவல்கள் அமைச்சின் இணையத்தளம் மற்றும் நிதி அமைச்சின் கீழ் இயங்கும் செயல் திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் காலாண்டு ரீதியாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கண்காணிப்பின் மற்றுமொரு விடயமாக ஜனாதிபதி செயலகம், அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய அறிக்கைகளை தயாரிக்கும் அலுவலும் இந்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு செயல் திட்டங்களுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் இணைந்து எதிர்வரும் ஆண்டுகளுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் போன்றே புதிய செயல் திட்டங்களை செயற்படுத்துவதற்காக உரிய பிரிவுகளிடம் ஒப்படைத்தலும் திட்டமிடல் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

**பல்கலைக்கழக நகர அபிவிருத்திச் செயல் திட்டம்**

பிரதேச மற்றும் பல்கலைக்கழக சமூகத்திற்கு நன்மை பயக்கச் செய்வதற்காக பல்கலைக்கழகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதியை அபிவிருத்தி செய்வதனை இலக்காகக் கொண்ட புதியதொரு திட்டமே பல்கலைக்கழக நகர அபிவிருத்தி செயல் திட்டமாகும். இத் திட்டத்தினை செயற்படுத்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் இப் பிரிவின் அலுவலாகும்.
இதன் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர, றுஹுணு, மொரட்டுவை போன்ற 3 பல்கலைக்கழகங்களில் இச் செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் குழுவுடன் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
இந்த மூன்று பல்கலைக்கழக நகர அபிவிருத்திச் செயல் திட்டங்கள் தவிர வயம்ப பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேத நிறுவகமும் இந்த எண்ணக்கருவின் அடிப்படையில் தமது நிறுவகங்களை அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்பதுடன் அதற்கான பிரேரணைகள் ஏற்கனவே தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**2014 ஆம் ஆண்டில் திட்டமிடல் பிரிவினால் கீழ் குறிப்பிடப்படும் செலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடாத்தும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.**

- **2014 ஜனவரி 16 ஆம் திகதி - உயர் கல்விக் கட்டமைப்பின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் சம்பந்தமாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடல்.**

  இங்கு ஒவ்வொரு நிறுவகங்களினதும் செயல் திட்டம் மற்றும் கூட்டுத் திட்டங்களின் முன்னேற்றம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதுடன் நிதி அமைச்சினால் தொடர்ந்தும் உயர் கல்வித் துறையின் வினைத் திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிவுறுத்தப்பட்டது.
- **2014 ஜனவரி 29 ஆம் திகதி - 2014 செயல் திட்டம் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் நடைபெற்ற கலந்துரையாடல்**

  இங்கு ஒவ்வொரு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்களினால் 2014 ஆம் ஆண்டின் செயல் திட்டம் முன்வைக்கப்பட்டது. உயர் கல்வி அமைச்சின் செயலாளர் செயல் திட்டத்தை மேம்படுத்த வேண்டிய விதத்தையும் தேவையான இலக்கை அடைந்துகொள்ளும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.
- **2014 மே 08, 09 ஆம் திகதி - முதல் காலாண்டு முன்னேற்றம் மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்பை மறுசீரமைத்தல் சம்பந்தமான கலந்துரையாடல்.**

இங்கு முதல் கலந்துரையாடல் மே மாதம் 08 ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளரது தலைமையில் அந்த அமைச்சிலும் இரண்டாவது கலந்துரையாடல் மே மாதம் 09 ஆம் திகதி மிலோதா நிறுவனத்திலும் நடைபெற்றது. அங்கு அமைச்சினால் 2014 வரவு செலவு சம்பந்தமான முன்னேற்றம் முன்வைக்கப்பட்டது. மேலும், 2014 வரவு செலவு முன்மொழிவுகளை செயற்படுத்தல், விடுதிகளை நிர்மாணித்தல் செயல் திட்டம், பெறுகை நடவடிக்கைகள், ஆளணி வெற்றிடம் சம்பந்தமாக முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

- **ஆசிய பசுபிக் உயர் கல்வியின் தகைமையை ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான பிராந்தியக் குழுவின் சர்வதேச மாநாடு - கலதாரி ஹோட்டல், 2014 ஆகஸ்ட் மாதம் 4, 5**
  ஆசிய பசுபிக் உயர் கல்வியின் தகைமையை ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான பிராந்தியக் குழுவின் சர்வதேச மாநாட்டின் 13 ஆவது கூட்டத்தொடர் 29 நாடுகளின் 52 பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 2014 ஆகஸ்ட் 4,5 ஆம் திகதிகளில் கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. இலங்கை தகைமை சட்டகம், ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சமமான ஒப்படைகளுடனான ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுக்கொள்வதற்கு உயர் கல்வி அமைச்சு இதனை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டது.

- **SAARC பிராந்தியத்தின் அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் மற்றும் பொருளாதார விருத்திக்காக உயர் கல்வியின் புதிய கண்டுபிடிப்புக்கள் சம்பந்தமான செயலமர்வு**
  உயர் கல்வி அமைச்சு, SAARC மனித வளங்கள் அபிவிருத்தி நிலையம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர் கல்வித் திட்டம் (ர்நுவுஊ) என்பவற்றின் ஒத்துழைப்புடன் “ சார்க் பிராந்தியத்தின் அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் மற்றும் பொருளாதார விருத்திக்காக உயர் கல்வியின் புதிய கண்டுபிடிப்புக்கள்” எனும் தலைப்பில் 2014 ஒக்டோபர் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை க்லோபல் டவர் ஹோட்டலில் மூன்று நாள் செயலமர்வொன்று செயலாளர் அலுவலகத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான பிராந்திய ஒத்துழைப்புக்கு எமது அறிவு மற்றும் அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்கு அமைச்சு இதனை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டது.

**அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை மீளாய்வு அறிக்கையைத் தயாரித்தல்**
**உயர் கல்வி அமைச்சினால் வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றுகை மீளாய்வு அறிக்கையைத் தயாரித்தல் திட்டமிடல் பிரிவின் பிரதான அலுவலாகும். இதற்காக அமைச்சின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, 02 பௌத்த பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவகங்கள் மற்றும் வெளிநாட்டு உதவிச் செயல் திட்டங்களின் ஊடாக அறிக்கைகளைப் பெற்று அவற்றைப் பகுப்பாய்வு செய்து 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மீளாய்வு அறிக்கையைத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அலுவலும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.**

இந்தப் பிரிவினால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. **தேசிய மற்றும் வெளிநாட்டு உதவி செயல் திட்டங்களை ஒழுங்குமுறைப்படுத்தல்**

   - தேசிய நிர்மாண செயல் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி செயல் திட்டங்களின் காலாண்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதை ஏற்பாடு செய்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்.

- மேற்குறிப்பிட்ட செயல் திட்டங்கள் சம்பந்தமான தரவுகளை அமைச்சின் இணையத்தளம் மற்றும் நிதி அமைச்சின் இணையத்தளத்தில் உட்படுத்தல்.
- செயல் திட்டங்களின் தரவுகளை பகுப்பாய்வு செய்தல், பிரச்சினைகளை அறிந்து கொள்ளல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள்.
- ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்படும் செயல் திட்டங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- வெளிநாட்டு உதவி செயல் திட்டங்களுடன் தொடர்பான பல்வேறு நிறுவனங்களினால் வேண்டப்படும் அறிக்கைகளைத் தயாரித்தல்.
- நகர அபிவிருத்தி செயல் திட்டத்துடன் தொடர்பான பல்வேறு அறிக்கைகளைத் தயாரித்தல்.
- வெளிநாட்டு உதவி செயல் திட்டங்களுடன் தொடர்பான செயற் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- வெளிநாட்டு உதவி செயல் திட்டங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இடைக்கிடை வருகை தரும் வெளிநாட்டு தூதுக் குழுவுடன் நடாத்தப்பட வேண்டிய கூட்டங்களை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- அமைச்சின் அமைச்சரவைப் பத்திரங்களின் முன்னேற்றத்தை ஒழுங்குமுறைப்படுத்தல்.

**2. வரவு செலவு அறிக்கையைத் தயாரித்தல்**

- வருடாந்த வரவு செலவு அறிக்கையைத் தயாரிப்பதற்காக செயல் திட்டப் பிரேரணைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல்
- நிதி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களிடையே வரவு செலவுத் திட்டப் பிரேரணைகள் சம்பந்தமான கலந்துரையாடலை ஏற்பாடு செய்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளின் முன்னேற்ற அறிக்கையை தயாரித்தல்.

**3. செயல் திட்டம் மற்றும் கூட்டுத் திட்டத்தை தயாரித்தல் மற்றும் கண்காணிப்பு**

- அமைச்சின் வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல்.
- அமைச்சின் மூலோபாயத் திட்டங்களை இற்றைப்படுத்தல்.
- அமைச்சின் கீழ் காணப்படும் ஏனைய நிறுவனங்களின் செயல் திட்டம் மற்றும் கூட்டுத் திட்டத்தை தயாரித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
- ஒப்படைக்கப்படும் தேசிய செயல் திட்டத்தை தயாரிக்கும்போது அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி பங்களிப்பை வழங்குதல்.

**4. பல்வேறு நிறுவனங்களினால் இடைக்கிடை வேண்டப்படும் அறிக்கைகளைத் தயாரித்தல்.**

- இலங்கை மத்திய வங்கிக்கு வருடாந்தம் பெற்றுக்கொடுக்க வேண்டிய அறிக்கைகளைத் தயாரித்தல்.
- நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கான உயர் கல்வித் துறைக்குரிய தரவுகளை பெற்றுக்கொடுத்தல்.
- பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைச்சின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவி செயல் திட்டங்கள் சம்பந்தமாக இடைக்கிடை வேண்டப்படும் அறிக்கைகளைத் தயாரித்தல்.
- கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையைத் தயாரிப்பதற்கான தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.

- தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தினால் வேண்டப்படும் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு அறிந்துகொள்ளப்பட்ட பிரதான துறைகள் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல்.

**5. தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பேணி வரல்.**

- பிரதான செயலாற்றுகை குறிகாட்டிக்குத் (மூீஐ) தேவையான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் தரவுத் தொகுதியை பேணி வரல், பகுப்பாய்வு செய்தல்.
- அமைச்சின் அலுவல்களுக்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.
  - 2014 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் நிலவும் மொழி ஆய்வுகூட வசதிகள், இணையத்தளம் மற்றும் றுை-குை வசதிகள் சம்பந்தமான தரவுகளைச் சேகரித்தல்.
  - இந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வெளிநாட்டு மாணவர்கள் சம்பந்தமான தரவுகளைச் சேகரித்தல்.

**6. ஏனைய அலுவல்கள்**

- அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டியைத் தயாரித்தல்.
- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கிணங்க ஆராய்ச்சிப் பிரேரணைகளை செயற்படுத்தலுடன் தொடர்பான அலுவல்களைக் கண்காணித்தல்.
- சர்வதேச பல்கலைக்கழகங்கள் தரப்படுத்தல் அறிக்கையை இற்றைப்படுத்தல்.
- சார்க் சமூகப் பட்டயத்தை தயாரிக்கும் அலுவலில் பங்கேற்றல்.
- சிரே‘ட அமைச்சர்கள் அலுவலகத்திற்கு தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையைத் தயாரிக்கும்போது அமைச்சின் பங்களிப்பைப் பெற்றுக்கொடுத்தல்.
- மனித உரிமைகள் செயல் திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தேுவையான தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களை உயர் கல்வி அமைச்சில் செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விசேட மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களுக்கு அமைச்சிலிருந்து கலந்துகொண்ட மேலதிக செயலாளர்களுக்கு தரவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.( புத்தளம், இரத்தினபுரி,அனுராதபுரம்)

**திட்டமிடல் பிரிவின் ஆளணி – 2014**

திட்டமிடல் பிரிவில் 2014.01.01 ஆம் திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரை பணியாற்றிய உத்தியோகத்தர்கள்

- ஜீ.எம்.ஆர்.டீ. அபொன்சு (பணிப்பாளர் - திட்டமிடல்)
- எச்.ஏ.ஆர்.பீ.பெர்னாந்து (உதவிப் பணிப்பாளர்)
- கே.ஏ.ஜீ.தில்ருக்ீ (உதவிப் பணிப்பாளர்)
- டப்ளியூ.பீ.எச்.விஜேசிங்ஹ (அபிவிருத்தி உதவியாளர்)
- ஏ.பீ.எம்.ஜே.சீ.பண்டார (அபிவிருத்தி உதவியாளர்)
- பீ.பீ.கொடகம (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- யூ.ஜே.பீ.பெர்னாந்து (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- யூ.எஸ்.மத்துமகே (புள்ளி விபரவியல் உதவியாளர்)
- ஈ.டீ.மதுரி தரங்கா குமாரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- டீ.ஜீ.ஏ.பீ.குணரத்ன (அபிவிருத்தி உத்தியோகத்தர்)
- சந்தன லக்மால் (அலுவலக ஊழியர்)

  2014.01.01 ஆம் திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையான காலத்தினுள் சேவைக்கு சமூகமளித்த உத்தியோகத்தர்கள் - இல்லை

  2014.01.01 ஆம் திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையான காலத்தினுள் சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள்

- ஜீ.ஏ.ரீ.டீ.பெரேரா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## கணக்குப் பிரிவு - உயர் கல்வி அமைச்சு

1. 2014 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் ஊடாக தலைப்பு – 171 இன் கீழ் இந்த அமைச்சுக்கு 02 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 04 கருத்திட்டங்களுக்காக ரூபா 8இ177இ671இ740.00 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆண்டின் இறுதியில் அதில் ரூபா 8இ108இ322இ359.00 நிதி செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய மொத்த நிதி முன்னேற்றம் 99% ஆகும்.

அது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித் திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு | மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1.செயற்பாடுகள் | | | | |
| i) | அமைச்சர் அலுவலகம் | | | |
| | மீண்டுவரும் | 68,441,537.00 | 68,441,537.00 | 100% |
| | மூலதனம் | 15,960,765.00 | 4,999,519.00 | 31.3% |
| ii) | நிருவாக மற்றும் தாபன சேவைகள் | | | |
| | மீண்டுவரும் | 208,520,526.00 | 208,420,017.00 | 99.95% |
| | மூலதனம் | 4,906,699,912.00 | 4,905,996,678.00 | 99.98% |
| 2. அபிவிருத்தி iii) | உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு | | | |
| | மீண்டுவரும் | 812,819,000.00 | 812,608,000.00 | 99.97% |
| | மூலதனம் | 663,000,000.00 | 659,000,000.00 | 99.4% |
| iv) | உயர் கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் | 1,502,230,000.00 | 1,448,856,608.00 | 96.4% |
| **மொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் செலவு** | | **8இ177இ671இ740.00** | **8இ108இ322இ359.00** | **99மூ** |

2. **செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் -**

**கருத்திட்டம் 2 – நிருவாகம் மற்றும் தாபன சேவைகள்**
இதன் கீழ் 2014 ஆம் ஆண்டிற்காக இந்தக் கருத்திட்டத்தின் மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு ரூபா 4இ906இ699இ912.00 ஆகும். மொத்த செலவு ரூபா 4,905,996,678.00 ஆகும்.

- ❖ இந்தச் செலவில் ரூபா 4,537,791,297.00 பல்கலைக்கழகங்களுக்கான விடுதிகளை நிர்மாணிக்கும் செயல் திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அது மொத்த செலவில் 92% ஆகும்
- ❖ பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியிருக்கும் புதிய மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டத்தின் சில கட்டங்கள் 2014 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 265,630,215.00 செலவிடப்பட்டது.

3. **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

**கருத்திட்டம் 3 – உயர் கல்வியின் தர மேம்படுத்தலுக்கான தாபன ரீதியான ஒத்துழைப்பு**

| | **பல்கலைக்கழகம் / நிறுவகம்** | **மதிப்பீட்டின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு:** | **மேற்கொள்ளப்பட்ட செலவு** |
|---|---|---|---|
| (i) | <u>இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்:</u> | மீண்டுவரும்: 525,000,000.00<br>மூலதனம்: 250,000,000.00 | 525,000,000.00<br>250,000,000.00 |
| (ii) | இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் | மீண்டுவரும்: 122,334,000.00<br>மூலதனம்: 300,000,000.00 | 122,123,000.00<br>296,000,000.00 |
| (iii) | இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | மீண்டுவரும்: 165,485,000.00<br>மூலதனம்: 113,000,000.00 | 165,485,000.00<br>113,000,000.00 |

**கருத்திட்டம் 4 – உயர் கல்வி அபிவிருத்திச் செயல் திட்டங்கள்**

- ❖ இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு ரூபா 1,502,230,000.00 ஆகும். அதில் ரூபா 1,448,856,608.00 செலவு செய்யப்பட்டுள்ளது.

செலவு விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.(ரூபாக்களில்)

- ➢ Tsunami Rehabilitation Project 72,000,000
- ➢ Higher Education for 21st Century Project (HETC) 964,995,952
- ➢ South Eastern University Development Project (SEUDP) 253,607,497
- ➢ SATREPS Project for Development of Pollution Control & Environment Restoration Technologies of Waste Landfill Sites 88,812,613
- ➢ Improvement of Japanese Language Learning of University ofKelaniya& University of Sabaragamuwa 42,730,491
- ➢ Building Research Excellence in Wildlife & Human Health in Sri Lanka 17,615,744
- ➢ Erasmus Mundas Action 2 Lot 9, Expert Exchange by Promoting Quality Education, Research & Training in South and South East Asia 756,965
- ➢ Norwegian Programme for Capacity Building in Higher Education & Research Development (NORHED) Project 8,337,346

## 4. அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

ஒதுக்கிய தொகை ரூ. 5,000,000.00
செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 4,829,160.00
செலவு விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.(ரூ)

| **கடன் வகை** | **வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** | **தொகை** |
|---|---|---|
| இடர் கடன் | 42 | 4,372,160 |
| துவிச்சக்கர வண்டிக் கடன் | 02 | 12,000 |
| பண்டிகைக் கால முற்பணம் | 81 | 405,000 |
| விசேட முற்பணம் | 16 | 40,000 |
| | **மொத்தம்** | **4,829,160** |

முற்பணக் கணக்குகளை ஒப்பீடு செய்து சீர்படுத்துகை அறிக்கை காலாண்டு ரீதியாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிப் பிரமாணம் 506 D இன் படி இறுதிக் கணக்கை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 5.மாதாந்த கணக்குப் பொழிப்பு

மாதாந்த கணக்குப் பொழிப்பு உரிய திகதிக்கு முன்னர் அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 6. வங்கி இணக்கக் கூற்றைத் தயாரித்தல்

மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்கள் இற்றைப்படுத்தப்பட்டு மாதாந்தம் தயாரிக்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 7. கணக்காய்வு அறிக்கைகள்

2014 ஆம் ஆண்டில் 09 கணக்காய்வு அறிக்கைகள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2014.12.31 ஆம் திகதியாகும்போது அவற்றில் 08 இற்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

## 8. வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு

2014 ஆம் ஆண்டின் பொருட்கள் கணக்கெடுப்பு அலுவல்கள் உரிய காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டது.

## 9. ஒதுக்கீட்டுக் கணக்கு

2014 ஆம் ஆண்டின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

## ஊடகப் பிரிவு – உயர் கல்வி அமைச்சு

இலங்கையை ஆசியாவிலே அறிவின் மத்திய நிலையமாக மாற்றியமைக்கும் தெளிவான எதிர்கால நோக்கின் கீழ் செயற்படும் உயர்கல்வி அமைச்சின் செயற்பாடுகளுக்கு ஊடகப் பிரிவினால் சிறப்பான பங்களிப்பு வழங்கப்படுகின்றது. அதற்கமைய, உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், வெளிநாட்டு செயற் திட்டங்கள் போன்றவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள், புதிய கண்டுபிடிப்புகள், புதிய செயல் திட்டங்களின் ஆரம்ப வைபவங்கள் உட்பட விசேட சந்தர்ப்பங்களின்போது ஊடக நடவடிக்கைகளைப் போன்றே ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் அமைச்சின் ஊடகப் பிரிவு மேற்கொள்கின்றது.

பிரதானமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் காணப்படும் 15 பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி அமைச்சின் கீழ் காணப்படும் இரண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் ஊடக பிரசார நடவடிக்கைகளும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் இந்தப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் உயர்கல்வி அமைச்சின் வரலாற்றிலே முதன்முறையாக அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரின் இணையத்தளம், முகநூல் பக்கம் ஒன்று ஊடகப் பிரிவின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டு முறையாக இற்றைப்படுத்திப் பேணி வருவதுடன் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தையும் முறையாக இற்றைப்படுத்தி அமைச்சு அல்லது அதனோடு தொடர்பான செய்திகள், தினசரி செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகள் மற்றும் புகைப்படங்களைப் போன்றே வீடியோ காட்சிகள் உட்படுத்தி இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

“உண்மை வேகமாக” - எனும் கூற்றை முன்மாதிரியாகக்கொண்டு அன்றைய தினத்திற்குரிய செய்தியை குறைந்தது அன்றைய தினமே இணையத்தளங்களில் பிரசாரம் செய்வது ஊடகப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். இதற்கமையவே, ஏனைய அமைச்சுக்களின் ஊடகப் பிரிவுடன் ஒப்பிடும்போது அவை பெற்றுக்கொண்ட முன்னேற்றத்தைவிடவும் குறுகிய காலத்தில் இந்த அமைச்சின் ஊடகப் பிரிவு பெற்றுக்கொண்டுள்ளது.

அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்பான சகல நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கீழ் இயங்கும் ஏனைய செயல் திட்டங்கள் சம்பந்தமாக நாளாந்தம் மற்றும் வார இறுதிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் செய்திகள் மற்றும் கடிதங்கள் அடங்கிய கோப்பு ஒன்றை தயாரித்து அதனூடாக அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு மற்றும் செயலாளருக்கு அமைச்சின் செயற்பாடுகள் சம்பந்தமாக நாளாந்தம் அறிவுறுத்துவதன் மூலம் துரிதமாக தீர்மானங்களை எடுப்பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது.

**2014 ஆம் ஆண்டில் ஊடகப் பிரிவினால் பிரசாரம் செய்யப்பட்ட செயற்பாடுகள்**

- தலைமைத்துவப் பயிற்சிப் பாடநெறியை ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் ஒலிப்பதிவுகளை மேற்கொண்டு ஊடகங்களுக்கு வழங்குதல், ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் - ஹொரணை, தியத்தலாவை, கன்னொருவை, பூவெலிகட போன்ற தலைமைத்துவப் பயிற்சி நிலையங்களின் நடவடிக்கைள் ஊடகப் பிரிவினூடாக நிறைவேற்றப்பட்டன.
- டிஜிட்டல் யுகத்தை நோக்கிய கல்வி மாற்றம் (Transforming education for the digital age)-(சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அக்கடமி ஜனவரி 09)
- ஜனவரி 09 ஆம் திகதி நடைபெற்ற "Institute of Applied Statistics Sri Lanka Induction of the president"
- 2014 ஜனவரி 16 ஆம் திகதி நடைபெற்ற "Unstoppable Sri Lanka 2020 Analyzing Development" செயலமர்வு
- திருகோணமலை, பூனாவை, மின்னேரியா மற்றும் அனுராதபுரம் போன்ற தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டங்களின் கண்காணிப்புச் சுற்றுப் பயணங்கள்.
- கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடத்தை ஆரம்பித்துவைக்கும் வைபவம் மற்றும் பொறியியல் பீடத்தை ஆரம்பித்துவைக்கும் வைபவம்.
- பல்கலைக்கழக மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப திறன்கள் சோதனை - பரிசளிப்பு வைபவம்.
- பேராசிரியர் தர்மா த சில்வா பாராட்டு விழா மற்றும் பேராசிரியர் தர்மா த சில்வா அவர்களின் முகாமைத்துவக் கல்வி, உலகமயமாக்கல், வர்த்தகம், ஏற்றுமதி, சந்தைப்படுத்தல் முறைகள் பற்றிய அறிக்கை, கட்டுரைகள் மற்றும் விரிவுரைகள் அடங்கிய நூலை அறிமுகம் செய்தல்.
- கிராமிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தித் திட்டம் (RED)
- கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவப் பீடத்தை ஆரம்பித்துவைக்கும் வைபவம்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் பயிலும் மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்வதற்கான கவிதா சித்திரப் போட்டியின் ஆரம்ப வைபவம்.
- “கவிதா” இறுதிப் போட்டி மற்றும் நிறைவு வைபவம்.
- SAITM ஆளணி அபிவிருத்தித் திட்டம்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர் கல்வித் தலைமைத்துவம் சம்பந்தமான பிராந்திய செயலமர்வு - ஆசியாவுக்கான பொதுநலவாய அமைப்பின் ஊடக மையம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
- கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற “AACSB international advanced quality management education worldwide through accreditation leadership and value added services” செயலமர்வு.

- ஹொரணை ஸ்ரீபாளி வளாக மாணவ மாணவிகளின் சித்திரப் போட்டியை ஆரம்பித்து வைத்தல்.
- Menasa கற்றலுக்கான வசதிகளை வழங்குவோருக்கான மாநாடு - 2014
- ராஜகிரிய ஆயுர்வேத மாணவர்களின் விடுதிகளைப் பரீட்சித்தல் மற்றும் அவர்களுக்கு விடுதிகள் அமைக்கும் செயல் திட்டத்தின் கீழ் விடுதிகளைப் பெற்றுக்கொடுத்தல் சம்பந்தமாக தீர்மானங்களை எடுக்கும் கலந்துரையாடல்.
- வெசாக் தினத்தை முன்னிட்டு சங்கைக்குரிய மாவரலே பத்திய தேரர் அமைச்சு வளவில் நிகழ்த்திய தர்ம போதனை.
- பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில மொழிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவம்.
- இரு நாடுகளுக்குமிடையிலான உயர்கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக பூட்டான் தூதுவர் மற்றும் அமைச்சருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்.
- இரு நாடுகளுக்குமிடையிலான உயர்கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக வியட்னாம் தூதுவர் மற்றும் அமைச்சருக்கிடையில் இடம்பெற்ற வரலாற்றுப் புகழ்மிக்க கலந்துரையாடல்.
- சர்வதேச ஆயுர்வேத கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியின் ஆரம்ப வைபவம்.
- ஏழாவது “வுழரசளைஅ ழரவடழழம உழகெநசநஉந” மற்றும் மூன்றாவது “Tropical coastal and Island Tourism Conference”
- தலைமைத்துவப் பயிற்சி நெறிக்கு அமைச்சரின் பங்கேற்பு - கன்னொருவ, தலாத்துஓய, பூவெலிகட முகாம்கள்.
- கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக வழிநடாத்தப்பட்ட தேசிய இலக்கியக் கலை பிரசாதனீ விழா.
- அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளியல் விஞ்ஞானம் மற்றும் சார்க் பிராந்தியத்தின் பொருளாதார விருத்தி சம்பந்தமான செயலமர்வு.
- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் டிப்ளோமா வழங்கும் வைபவம்.

2014 ஆம் ஆண்டில் ஊடகப் பிரிவில் சேவையாற்றிய பின்னர் விலகிச்சென்ற அங்கத்தவர்கள் மற்றும் அவர்கள் ஆற்றிய பணிகள்.

1. ஆர்.டீ.கேசர ஜயசிரி - அபிவிருத்தி உதவியாளர் - செய்திப் பத்திரிகைகளுக்கான அறிக்கைகளை தயாரித்தல்.
2. கயான் இத்தமல்கொட - அபிவிருத்தி உதவியாளர் - செய்திப் பத்திரிகைகளுக்கான அறிக்கைகளை தயாரித்தல்.
3. சானக்க துஹுூல்வல - அலுவலக ஊழியர் (தற்காலிகம்)

## கவிதா Talent - உயர் கல்வி அமைச்சு

01. நோக்கம்:- தொடு வானத்தையும் தாண்டிய ஆற்றல்கள் நிரம்பிய படைப்பாற்றல் மிக்க கற்ற சமூகமொன்றினை தேசத்திற்கு அளித்தல்.

02. நோக்கம் :- உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் திறமையான மாணவர்களின் கலை ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவற்றை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அவர்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வருதல்.

03. நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பம் :- கவிதா நிகழ்ச்சித் திட்டம் 2011 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது.

3.1. 2012 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் முதலாவது இறுதிப் போட்டிகள் மற்றும் விருது வழங்கும் வைபவம் நெலும் பொக்கண கலையரங்கத்தில் நடைபெற்றது.

3.2. அது 07 பிரிவுகளின் கீழ் ( 27 சிங்கள மொழி மூலப் போட்டிகள், 27 தமிழ் மொழி மூலப் போட்டிகள் ஸ்ரீ 54 என்ற ரீதியில்) நடைபெற்றதுடன் சித்திரம் மற்றும் புகைப்படங்கள் எனும் இரு பிரிவுகள் மொழி பேதமின்றி 02 போட்டிகளும் என மொத்தம் 56 போட்டிகள் நடைபெற்றன.

**04. இரண்டாவது விருது வழங்கும் வைபவம் :-**

இரண்டாவது விருது வழங்கும் வைபவம் மற்றும் இறுதிப் போட்டிகள் 2014 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. முதலாம் வருடத்தில் போன்றே இந்த வருடத்திலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 02 போட்டிகள் மற்றும் 02 விருது வழங்கும் வைபவங்கள் 02 தினங்கள் நடைபெற்றன. இரண்டாவது விருது வழங்கும் வைபவத்தின் முதல் சுற்றில் நடைபெற்ற சில போட்டிகளை அகற்ற நேரிட்டது. அதற்குக் காரணம் சில போட்டிகளுக்கு மாணவர்களின் அதிக ஈடுபாடு இல்லாமையாகும்.

- இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டின் செலுத்துகைகளுக்கான உறுதிச் சீட்டுக்கள் மற்றும் அதனுடன் தொடர்பான எழுத்தாவணங்களை தயார் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் சிங்கள மொழி மூல 5 ஆவது சுற்றுப் போட்டிக்கான மற்றும் தமிழ் மொழி மூல 3 ஆவது சுற்றுப் போட்டிக்கான ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன. போட்டியாளர்களை அறிவுறுத்தல், அவர்களுக்குத் தேவையான மண்டப வசதிகள், தங்குமிட வசதிகள் போன்றவற்றை இந்தக் காலத்தில் ஏற்பாடு செய்ய வேண்டியேற்பட்டது.

2014.01.01 ஆம் திகதி முதல் 2014.01.31 ஆம் திகதி வரை கவிதா வுயடநவெ போட்டித் தொடரின் சிங்கள மொழி மூல ஐந்தாவது சுற்று மற்றும் தமிழ் மொழி மூல மூன்றாவது சுற்றுப் போட்டித் தொடருக்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்றன. இங்கு சிங்கள மொழியில் சங்கீதம், நடனம், சித்திரம் போன்ற போட்டிகளுக்கான பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றன.

மேலும் தமிழ் மொழி மூல இசைப் பயற்சி, இசைக் கருவிகளை இசைத்தல் சம்பந்தமான பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றன. இந்தப் பட்டறைகளுக்கு மஹரகம தேசிய கல்வி நிறுவகம் மற்றும் நாராஹேன்பிட்ட சித்ரசேன கலையரங்கமும் சித்திரப் பயிற்சிப் பட்டறைக்காக தெஹிவலை மிருகக்காட்சிசாலையும் தேரந்தெடுக்கப்பட்டன.

இங்கு தமிழ் மொழி மூல மூன்றாவது சுற்று மற்றும் சிங்கள மொழி மூல ஐந்தாவது சுற்றுக்களின் படப்பிடிப்பு பத்தரமுல்லை ஜனகலா கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

- பெப்ரவரி மாதத்தில் ஐந்தாவது சுற்றின் நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அறிவிப்பாளர் பயிற்சிப் பட்டறை ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்டது. சித்திரப் பயிற்சிப் பட்டறை மற்றும் போட்டியாளர்களைத் தேரந்தெடுக்கும் நடவடிக்கைகள் மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் மற்றும் பத்தரமுல்லை ஜனகலா கேந்திர நிலையத்தில் நடாத்தப்பட்டது.மேலும், இதில் கலந்துகொண்ட நடுவர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்குக்கான கட்டணங்களைச் செலுத்தும் நடவடிக்கைகள் இந்த மாத இறுதியாகும்போது பூர்த்தி செய்யப்பட்டன.

- 2014.03.01 ஆம் திகதி முதல் 2014.03.31 ஆம் திகதி வரை சிங்கள மொழி மூல சங்கீதப் பிரிவின் ஆறாவது சுற்றுப் போட்டிக்கான பயிற்சிப் பட்டறைகள் புதவத்த கலை நிறுவனத்தில் நடாத்தப்பட்டதுடன் பத்தரமுல்லை ஜனகலா கேந்திர நிலையத்தில் படப்பிடிப்புக்கான மேடையை நிர்மாணித்து மின்னொளியூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டுப்புற நடனங்கள் இறுதிப் போட்டிகளுடன் தொடர்பான படப்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புகைப்படச் செயலமர்வொன்று நகரசபை வளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிங்கள மொழி சங்கீதப் போட்டிகளின் ஆறாவது சுற்றுப் போட்டி தொடர்பான படப்பிடிப்பு பத்தரமுல்லை ஜனகலா கேந்திர நிலையத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றைய தினமே புகைப்படப் பயிற்சிப் பட்டறையொன்று பம்பலப்பிட்டிய புகைப்படப் பாடசாலையில் நடைபெற்றது.

- தமிழ் மொழி மூல சங்கீதம், நடனம், நகைச்சுவைப் படைப்புக்கள், கிராமப்புற நடனம் போன்ற போட்டிகளுக்கான பயிற்சிப் பட்டறைகள் மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உணவுப் பானங்கள், தங்குமிட வசதிகளை மஹரகம தேசிய கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. பத்தரமுல்லை 'அப்பேகம' வளவில் தமிழ் மொழி மூல நான்காவது சுற்றுடன் தொடர்பான சங்கீதம் மற்றும் நடனப் போட்டிகளின் படப்பிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல இறுதிப் போட்டிகளுக்கான அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள்களை அச்சிடல். போட்டியாளர்களுக்கு வழங்குவதற்கான கிண்ணங்கள் மற்றும் விருதுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய நிறுவனங்களிடம் ஒப்படைத்தல். இறுதிப் போட்டிக்குச் செலுத்துவதற்குத் தேவையான முற்பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கப்பட்டது. அவற்றை அமைச்சின் தலைவர்களுக்கு சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகரித்துக் கொள்ளல் என்பன மேற்கொள்ளப்பட்ட அலுவல்களாக குறித்துக்காட்ட முடியும். இந்த சகல அலுவல்கள் தமிழ் மொழி மூல நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

- 2014.04.01 ஆம் திகதி முதல் 2014.04.30 ஆம் திகதி வரை தமிழ் மொழி மூல அறிவிப்பாளர், நகைச்சுவை ஆக்கப் படைப்புப் போட்டிகளின் படப்பிடிப்புக்கள் பத்தரமுல்லை ஜனகலா நிலையத்தில் நடாத்தப்பட்டதுடன் சிங்கள மொழி இசைப் பிரிவு அரையிறுதிப் போட்டிக்குரிய முன் பயற்சி செயலமர்வுகள் மஹரகமை தேசிய கல்வி நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.
  சிங்கள மொழி மூல இசை மற்றும் நடன அரையிறுதிப் போட்டிகள் பத்தரமுல்லை ஜனகலா நிலையத்தில் நடாத்தப்பட்டன. மேலும், மாபெரும் இறுதிப் போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் விருது வழங்கும் வைபவத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை இந்த மாதத்தினுள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

  மாபெரும் இறுதிப் போட்டி நிகழ்ச்சிகள் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மே மாதம் 22, 24 ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சித்திரம் மற்றும் புகைப்படக் கண்காட்சியொன்றையும் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான மண்டபமாக அழகியற் கலை பல்கலைக்கழகத்தின் காட்சிக் கலைப்(ஏளைரயட யுசவள) பீடத்தின் ஜே.டீ.ஏ.பெரேரா மண்டபம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த

சித்திரங்களை மெருகூட்டுதல், போட்டியாளர் பற்றிய தகவல்களை சேகரித்தல், சித்திரம் மற்றும் புகைப்படக் கண்காட்சிக்கென வேறான அழைப்பிதழை தயாரித்தல், புகைப்படங்களை தேர்ந்தெடுத்தல், போக்குவரத்து வசதிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை இந்தக் காலத்தில் மேற்கொள்ள நேரிட்டது.

அதிதிகளுக்கான அழைப்பிதழ்களை அனுப்புதல், மண்டபத்தில் ஆசனங்களை ஒதுக்குதல், அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அச்சிடும் அலுவல்கள், வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை தயார் செய்தல், நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கான கடமை அடையாள அட்டைகளை தயாரித்தல், சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் இறுதிப் போட்டிக்குரிய நினைவு மலர் என்பவற்றை தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் போன்ற நடவடிக்கைகளும் சகல முக்கிய அதிதிகளின் மற்றும் பிரிவுத் தலைவர்களின் செய்திகளைப் பெற்றுக்கொள்வதும் இக்காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட பிரதான அலுவல்களாகக் குறிப்பிடலாம்.

- 2014.05.01 ஆம் திகதி முதல் 2014.05.31 திகதி வரை இறுதிப் போட்டிகள் மற்றும் விருது வழங்கும் வைபத்துடன் தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இங்கு போட்டிகளில் கலந்துகொள்ளும் சகல மாணவர்களதும் பெயர் பட்டியல், அதில் கலந்துகொள்ளும் அதிதிகளின் பெயர் பட்டியல், கலந்துகொள்ளும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பெயர் பட்டியலைத் தயாரித்தல், அழைப்பிதழ்கள், பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்குத் தேவையான அலுவல்களை மேற்கொள்ளல்.

- உணவுப் பானங்கள், போட்டியாளர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகளை ஏற்பாடு செய்தல், அவர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருந்த பரிசுத் தொகையை தயார் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற அலுவல்களை உரிய உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
  மேலும், போட்டியாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகளை ஏற்பாடு செய்தல், இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கான செலுத்துகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், முள்பணம் செலுத்துதல், போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்தல், உரிய நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரி அவற்றைப் பெறுகைப் பிரிவுக்குப் பெற்றக்கொடுத்து உரிய நிறுவனத்தை தேர்ந்தெடுத்தல்.

இலக்கியப் பிரிவில் தெரிவாகியுள்ள போட்டியாளர்களின் ஆக்கங்களை அச்சிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆக்கங்களை அதிதிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் இக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் கண்காட்சியுடன் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் குறிப்பிட்ட நிறுவனத்திற்குச் சென்று குறிப்பிட்ட ஆக்கங்களை கண்காட்சிக்குத் தயார் செய்யப்பட்டது. சிங்கள் மற்றும் தமிழ் மொழி மூல இறுதிப் போட்டியுடன் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் மஹரகமை தேசிய கல்வி நிறுவனம், புதவத்த கலை நிறுவனத்தில் நடைபெற்றன. சிங்கள மொழி மூல இறுதிப் போட்டியின் பாடல் பிரிவில் சமர்ப்பிக்கப்பட்ட மூவிசை பாடல் பயிற்சி அஜித் சவுண்ட்ஸ் இல் நடைபெற்றது.

2014.05.16, 17 போன்ற திகதிகளில் சித்திரக் கண்காட்சிக்கு தயாராகியமையும் 2014.05.18 மற்றும் 19 இரு திகதிகளில் சித்திரக் கண்காட்சி காட்சிக் கலைப் பீடத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.
இறுதிப் போட்டிக்கான மேடையை நிர்மாணித்தல் மற்றும் ஒளியூட்டல் நடவடிக்கைகள் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. 2014.05.21 ஆம் திகதி இறுதிப் போட்டியின் சிங்கள மொழி மூல ஒத்திகைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. 2014.05.22 ஆம் திகதி சிங்கள மொழி மூல இறுதிப் போட்டி மற்றும் விருது வழங்கும் வைபவம் நடைபெற்றது. 2014.05.23 ஆம் திகதி தமிழ் மொழி மூல இறுதிப் போட்டி மற்றும் விருது வழங்கும் வைபவம் நடைபெற்றது.

கவிதா போட்கள் மற்றும் விருது வழங்கும் வைபவம் தொடர்பான பின்னூட்டலை மேற்கொள்ளல் மற்றும் விருதுகளைப் பெற்ற மாணவர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் இங்கு இடம்பெற்றன. 2014/2015 கவிதா போட்டிகளுக்கான ஆரம்ப திட்டமிடல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2014/2015 கவிதா விருது வழங்கும் வைபவம் மற்றும் போட்டிகளுக்கான அடிப்படைச் செலவு மதிப்பீட்டைத் தயாரித்து அதனை மேற்பார்வை செய்வதற்காக உரிய உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்தல். பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள் மட்டத்தில் சித்திரம், புகைப்படக் கண்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சியை நடாத்துவது சம்பந்தமாக கலந்துரையாடலை மேற்கொள்ளல். பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றை நடாத்தி 2014/2015 கவிதா நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமாக திட்டத்தை தயாரித்தல். மேலும், போட்டிகளை நடாத்துவது தொடர்பாக ஏனைய திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் உரிய இடத்தை தெரிவு செய்தல் என்பன இதனிடையே மேற்கொள்ளப்பட்டது. சித்திரம் மற்றும் புகைப்படப்பிடிப்பு போட்டிகள் பிரிவில் கலந்துகொண்ட மாணவர்களின் ஆக்கங்களை மீண்டும் அவர்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பணிபுரியும் கவிதா நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் கலந்துரையாடி 2014 / 2015 கவிதா வுயடநவெ நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப போட்டி நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடல்.

## மாணவர் அலுவல்கள் பிரிவு – உயர் கல்வி அமைச்சு

உயர் கல்வி அமைச்சின் மாணவர் அலுவல்கள் பிரிவு, மாணவர் அலுவல்கள் சம்பந்தமான சிரேஷ்ட ஆலோசகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் போன்ற உத்தியோகத்தர்களைக் கொண்ட சிறிய பிரிவொன்றாகும். இப் பிரிவின் முக்கிய நோக்கம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவகங்களின் மாணவர் நலனோம்புகையை உயர்த்துவது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதாகும். இந்த அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தலைமைத்துவ ஆற்றல் மற்றும் சாதகமான சிந்தனை விருத்தி பயிற்சி வேலைத் திட்டத்தை சிறப்பாக நடாத்துவதற்கும் 2014 ஆம் ஆண்டில் இப்பிரிவு தனது பங்களிப்பை வழங்கியது.

2014 ஆம் ஆண்டில் மாணவர் அலுவல் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. **தலைமைத்துவ ஆற்றல் மற்றும் சாதகமான சிந்தனை விருத்தி பயிற்சி வேலைத் திட்டம் 2014 / 2015**

2014 / 2015 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டம் செப்டெம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 4 கட்டங்களாக செயற்படுத்தப்பட்டது. இந்தப் பயிற்சி வேலைத் திட்டத்தை சிறப்பாக நடாத்தி முடிப்பதற்காக ஆரம்பம் முதல் இறுதி வரை செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்கியது.
தலைமைத்துவப் பயிற்சி நிலையங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் இணையத்தில் வெளியிடப்பட்டதன் பின்னர் மாணவர்களிடமிருந்து வரும் கேள்விகளுக்குப் பதில் அளித்தல் மாணவர் அலுவல்கள் பிரிவின் ஒரு அலுவலாக இருப்பதுடன் மாணவர் பிரச்சினைகளை முடியுமான உச்சளவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டம் தொடர்பாக பிரதானமாக மாணவர் அலுவல்கள் பிரிவுக்கு கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**i. தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டத்திற்கான வளவாளர்களை தேர்ந்தெடுத்தல்**

தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டம் தொடர்பாக வரலாறு, உலகமயமாக்கல், தொழில் வழிகாட்டி, பல்கலைக்கழகக் கல்வி என 5 விரிவுரைகள் மற்றும் வைத்தியர்களினால் விசேட விரிவுரைகள் நடாத்தப்படும்.
இந்த விரிவுரைகளுக்கான வளவாளர்களை சகல பல்கலைக்கழகங்களும் உள்ளடக்கப்படும் வகையில் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் 2014 ஜூன் 26 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் விசேட செயலமர்வு மற்றும் பயிற்சிப் பட்டறையொன்றை நடாத்தி மேற்கூறப்பட்ட தலைப்புக்கள் சம்பந்தமான விசேட பயிற்சியொன்று வளவாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டது.
இந்த வளவாளர்கள் சகல மாணவர் பயிற்சி நிலையங்களுக்கும் வருகை விரிவுரையாளர்களாகக் கலந்து கொண்டதுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் தேவையான மாற்றங்கள் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டன.

**ii. மொழி பெயர்ப்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

2014/ 2015 தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டத்திற்காக 3 பயிற்சி நிலையங்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல மாணவர்கள் கலந்து கொண்டதுடன் சிங்கள மொழி மூலம் நடாத்தப்பட்ட சகல செயற்பாடுகளும் தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படுவதற்கு மொழி பெயர்ப்பாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக அனுபவம் மற்றும் தகைமை பெற்ற மொழி பெயர்ப்பாளர்களை ஆட்சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கை இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு அலுவலாகும்.

**iii. கலாசார நிகழ்ச்சிகள்**

தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டத்தின் அனைத்து மாணவர் பயிற்சி நிலையங்களிலும் ஒரு நாளில் ஒரு கலாசார நிகழ்ச்சியென 3 தினங்கள் கலாசார நிகழ்ச்சிகள் நடாத்தப்படும். இதற்காக சிங்களம், தமிழ், முஸ்லிம் இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இசைக் குழுக்கள், நடனக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு குறிப்பிட்ட கலாசார நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இந்தக் குழுக்களை குறிப்பிட்ட பயிற்சி நிலையங்களுக்கு அனுப்புதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சகல நடவடிக்கைகளின் செலுத்துகைகளுக்கான வவுச்சர்களைத் தயாரித்து சிரேʼட ஆலோசகர் திரு.கீர்த்தி மாவல்லகே அவர்களின் சிபாரிசுடன் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும்.

**2. பல்கலைக்கழக மாணவர் விடுதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்**

i) சகல பல்கலைக்கழகங்களினதும் மாணவர் நலன்புரிப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கு அழைத்து அவர்களுடன் மாதத்திற்கொருமுறை கலந்துரையாடி அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் விடுதித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதற்காக பல்கலைக்கழகங்கள் அல்லது அமைச்சினால் நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான முறையொன்றினைத் திட்டமிடல்.

ii) சகல விடுதிகளினதும் மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப தொலைக்காட்சிப் பெட்டியொன்று மற்றும் துணை விடுதிக் காப்பாளர்களுக்கு கணனியொன்று பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**3. மகாபொல புலமைப் பரிசில் மற்றும் மாணவர் உதவித் தொகையைச் செலுத்துதல்**

i) சகல பல்கலைக்கழகங்களிலும் மகாபொல உதவித் தொகை அல்லது மாணவர் உதவித்தொகை கிடைக்காத ஆனாலும் ஏதேனும் உதவித்தொகை தேவைப்படும் மாணவர்களுக்கு ஏதேனும் உதவித் தொகையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான திட்டத்தைத் தயாரித்தல். (தற்போது இது சம்பந்தமாக தாபிக்கப்பட்டுள்ள நிதியத்தை மேலும் பலப்படுத்தல் மற்றும் அதனை பலப்படுத்துவதற்கு பல்கலைக்கழக மட்டத்தில் கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்)

ii) சகல பல்கலைக்கழக மாணவர்களுக்காகவும் செலுத்தப்படும் மகாபொல உதவித் தொகை மற்றும் மாணவர் உதவித் தொகையைச் செலுத்தும்போது சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படின் அவற்றைத் தவிர்த்து சகல பல்கலைக்கழகங்களுக்குமாக தயாரிக்கப்படும் கால அட்டவணைக்கமைய செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**4. கலை அலுவல்கள்**

i) பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சகல பல்கலைக்கழகங்களிலும் கலை மன்றங்களை அமைத்தல், அவற்றை இற்றைப்படுத்தல் மற்றும் அவற்றுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைப் போன்றே மனிதவளங்களையும் பெற்றுக் கொடுத்து அவற்றை தொடர்ச்சியாகப் பேணிவருதல்.

ii) பல்கலைக்கழக மட்டத்தில் அவற்றுக்குப் பொருத்தமான இடைக்காலச் சட்டங்களை உருவாக்கி அதனூடாக பல்வேறு கலை அலுவல்களுக்கமைய நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.

5. **<u>மாணவர் பிரச்சினைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள்</u>**

i) பல்கலைக்கழகங்களின் பல்வேறுபட்ட மாணவர் அலுவல்கள், மாணவர்களின் வேண்டுகோள்களைப் போன்றே மாணவர் பிரச்சினைகள் சம்பந்தமாக கௌரவ உயர் கல்வி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் உப வேந்தர்கள், பீடாதிபதிகள், பதிவாளர்கள், மாணவ ஆலோசகர்கள், பல்வேறு மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர் சங்கங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து கௌரவ உயர் கல்வி அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடி தேவையான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

ii) பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் மற்றும் மாணவர்களின் எதிர்ப்பார்ப்பாட்டங்களைப் போன்றே மற்றும் மாணவர்களின் பல்வேறு தீமை பயக்கும் செயற்பாடுகள் சம்பந்தமாக கௌரவ உயர் கல்வி அமைச்சரின் ஆலோசனைகளின் பிரகாரம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடவடிக்கை மேற்கொள்ளல்.

iii) தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் மாணவர்களின் பெற்றோர் ∴ பாதுகாவலரை அழைத்து மாணவர்களின் நடவடிக்கை சம்பந்தமாக அவர்களை அறிவுறுத்தல்.

6. **<u>பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகள் மற்றும் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள்</u>**

i) பல்கலைக்கழகங்களில் தற்போது நடாத்தப்பட்டுவரும் கற்கை நெறிகள் நிகழ்கால உலக பொருளாதார முறைமையுடன் எந்தளவுக்குப் பொருந்தும் என்பது சம்பந்தமாக பல்கலைக்கழக உப வேந்தர்கள், செனட்டின் பிரதிநிதிகள் மற்றும் அறிஞர்களுடன் கலந்துரையாடி பெற்றுக்கொள்ளப்படும் கருத்துக்கள், தகவல்களைப் போன்றே இதனுடன் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக கௌரவ உயர் கல்வி அமைச்சர் மற்றும் செயலாளரை அறிவுறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளல்.

7. **<u>உயர் தொழில்நுட்ப நிறுவகங்கள் தொடர்பான அலுவல்கள்</u>**

i) உயர் தொழில்நுட்ப நிறுவகங்களின் மாணவர் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாக நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நலன்புரி நடவடிக்கைகளை முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

ii) மாணவர் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் போன்றே மாணவர் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் உயர் தொழில்நுட்ப நிறுவகங்களின் பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், பணிப்பாளர் நாயகத்தைப் போன்றே மாணவர்களின் பெற்றோரை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்.

iii) மாணவர் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் பல்வேறு வேண்டுகோள்கள் சம்பந்தமாக மாணவர் செயற்பாட்டாளர்கள், மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்.

iv) சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவகங்களைச் சேர்ந்த மாணவர்களின் நலனோம்புகை, கற்கை நடவடிக்கைகளைப் போன்றே அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சிரமங்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக சகல சந்தர்ப்பங்களிலும் முன்வந்து பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவகங்களைச் சேர்ந்தவர்கள், மாணவர்கள், அவற்றுடன் தொடர்பான பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் நபர்களுடனும் மாணவர்களின் பெற்றோர்களுடனும் நிதமும் தொடர்புகளைப் பேணி சகல பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக்கொள்வது இந்தப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு – உயர் கல்வி அமைச்சு

உயர் கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் உயர் கல்வி நிறுவகங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை திட்டமிட்டு செயற்படுத்தும் பணி இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பிரிவின் அலுவல்களை அமைச்சின் செயலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மேற்கொள்வார்.

**2014 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஆளணி பற்றிய விபரம்**

1. திருமதி கே.வீ.எஸ். த சில்வா – பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், இலங்கை கணக்காளர் சேவை – தரம் 1
2. திருமதி எம்.ஏ.ஏ.சீ.பீ. அல்விஸ் - அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. செல்வி சுமேதா குமாரி அரட்டுவாவ – கணனி உதவியாளர்.

**2014 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள்:**

01. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்:
முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(1) இற்கமைய அமைச்சின் கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டில் குழு அங்கத்தவர்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைவர் - கலாநிதி திரு.சுனில் ஜயந்த நவரத்ன, செயலாளர், உயர் கல்வி அமைச்சு.
அங்கத்தவர் - திரு.ஏ.என்.ஹப்புகல, பணிப்பாளர், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்.
அங்கத்தவர் - திரு.டப்ளியூ.டீ.துʼமன்த்த, பிரதம கணக்காளர், உயர் கல்வி அமைச்சு.
அவதானிப்பு அங்கத்தவர் - திருமதி வீ.டீ.சீதா, கணக்காய்வு அத்தியட்சகர், உயர் கல்வி அமைச்சு.
அழைப்பாளர் - திருமதி கே.வீ.எஸ். த சில்வா, பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், உயர் கல்வி அமைச்சு.

மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக குழுக் கூட்டங்களுக்கு அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் செயல் திட்டப் பணிப்பாளர்கள் போன்றோரும் அழைக்கப்படுவார்கள்.

2014.04.02, 2014.07.07, 2014.10.03, 2014.12.05 ஆகிய தினங்களில் குழு கூடியதுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, பாராளுமன்ற பொது முயற்சிகள்பற்றிய குழுவின் அறிக்கை மற்றும் அரச கணக்குக் குழுவின் பரிந்துரைகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு பல்கலைக்கழகக் கட்டமைப்பில் நிலவும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் பிரிவுகளில் நிலவும் குறைபாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடி சீர்செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

i. பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரித்தல் மற்றும் பொருட்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளை உரிய தினத்தில் நிறைவு செய்தல்.

ii. கணக்காய்வு அறிக்கைகளுக்கான பதிலை அனுப்புவதற்கு தாமதமாகியுள்ள சந்தர்ப்பங்களை தேடிப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ளல்.

iii. உயர் கல்வி நிறுவகங்களில் உபாயவழித் திட்டத்தை இற்றைப்படுத்தல், வருடாந்த செயல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தாமதமாகும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

iv. உயர் கல்வி நிறுவகங்களில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளின் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதன் கீழ் அந்த நிறுவனங்களின் கணக்காய்வுக் குழுக்களை பயன்மிக்க வகையில் நடாத்துதல், வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை தயாரித்து செயற்படுத்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக கலந்துரையாடி தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

v. கணக்காய்வாளர் நாயகத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வருடாந்த நிதி கூற்றுக்களில் காணப்படும் நிதியீட்டுப் பிழைகளை சீர்செய்தல் முன்னேற்றத்தை ஒழுங்குமுறைப்படுத்தல்.

vi. அமைச்சு மற்றும் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் செயல் திட்டங்களின் வருடாந்த வரவு செலவு நிதி ஒதுக்கீட்டின் பயன்பாடு சம்பந்தமாக மீளாய்வு செய்தல்.

2. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பாக,

i. அம்பாறை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கை சம்பந்தமாக விசேட விசாரணையை நடாத்துதல்.

ii. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்கியல் அலுவல்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள கணக்கியல் பொதி சம்பந்தமாக கட்டமைப்புக் கணக்காய்வை மேற்கொள்ளல்.

iii. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் வினாத் தாள்கள் மதிப்பீட்டு நடைமுறை சம்பந்தமாக கட்டமைப்புக் கணக்காய்வை மேற்கொள்ளல்.

iv. சகல உயர் தொழில்நுட்ப நிறுவனங்களினதும் பணிப்பாளர்கள், பதிவாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கு அந்த நிறுவனங்களின் நிதி முகாமைத்துவக் குறைபாடுகளை தவிர்த்துக்கொள்தல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்காக பயிற்சிப் பட்டறையை நடாத்துதல்.

3. எதிர்மறையான கணக்காய்வுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் பேராதனைப் பல்கலைக்கழகம், விவசாய விஞ்ஞான பட்டப்பின் கற்கை நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் சுதேச மருத்துவ விஞ்ஞான நிறுவகம் போன்ற நிறுவனங்களின் கணக்காய்வுக் கருத்துக்களுக்கு காரணமான விடயங்களை பகுப்பாய்வு செய்து சீர்செய்யும் நடவடிக்கைக்கு வழிகாட்டல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## செயலாளர் அலுவலகம் - உயர் கல்வி அமைச்சு

அமைச்சின் செயலாளரின் கீழ் நேரடியாக செயற்படும் செயலாளர் அலுவலகத்தின் பணியாட்தொகுதியினால் மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அலுவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- செயலாளர் அலுவலகத்திற்கு நாளாந்தம் வரும் சேவை பெறுநர்கள் மற்றும் அதிதிகளின் தேவைகளை நிறைவேற்றல் மற்றும் செயலாளரை சந்திக்கச் செய்தல்.

- செயலாளர் /செயலாளர் அலுவலகத்திற்கு நாளாந்தம் கிடைக்கும் ஈமெயில், பெக்ஸ் மற்றும் அழைப்பிதழ்களை முன்னுரிமை அடிப்படையில் பதிந்து கொள்ளல் மற்றும் செயலாளருக்கு தெரியப்படுத்தல்.

- நாளாந்தம் செயலாளரின் கடமை நாட்குறிப்பை (டைரியை) பேணி வரல். செயலாளர் ஒப்படைக்கும் கடிதங்களைத் தயாரித்தல் மற்றும் ஈ மெயில் செய்திகளை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

- கௌரவ அமைச்சர், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிறுவகங்களுடன் மேற்கொள்ளும் கலந்துரையாடல்களின் ஒருங்கிணைப்பு அலுவல்கள்.

- செயலாளரின் தேவைக்கேற்ப ஏனைய நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களின் ஒருங்கிணைப்பு அலுவல்கள், அதற்குத் தேவையான எழுத்தாவணங்களை தயார் செய்து கொடுத்தல் மற்றும் அதன் பின்னூட்டல் அலுவல்களை மேற்கொள்ளல்.

- அமைச்சரவை நிருபங்களை தொகுத்து செயலாளர் ஊடாக கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பித்தல் மற்றும் தீர்மானம் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள்.

- சார்க் மாநாட்டின் அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

- மாதாந்தம் நடைபெறும் அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாதத்திற்கான நிலையான குழுக் கூட்டத்திற்கு செயலாளர் அலுவலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றல். அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக செயலாளரை அறிவுறுத்தல் மற்றும் அது சம்பந்தப்பட்ட கோவையை செயலாளரின் பரிசீலணையின் நிமித்தம் இற்றைப்படுத்திப் பேணி வரல்.

- வாராந்தம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துடன் தொடர்பான அமைச்சரவை நிருபங்கள் அடங்கிய கோவை அமைச்சரவை அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்றவுடனேயே கௌரவ அமைச்சருக்கு சமர்ப்பித்தல்.

- UNESCO கலந்துரையாடல் மற்றும் மாநாடுகளுடன் தொடர்பான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

- சட்டப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட விடயங்களுக்குத் தேவையான அவசர கடிதங்களை தயாரித்தல்.

- பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்துடன் தொடர்பான கோவையை இற்றைப்படுத்திப் பேணி வரல்.

- சனாதிபதி செயலகத்திலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பதில் கடிதங்களை அனுப்புதல்.

- வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தல் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்திப் பேணி வரல்.

- அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட வேலைத் திட்டங்களுடன் தொடர்பான கோவைகளைப் பேணி வரல்.

- செயலாளர் அலுவலகத்திற்கு நாளாந்தம் கிடைக்கப்பெறும் செய்திப் பத்திரிகைகள் ஊடாக அமைச்சு தொடர்பான செய்திகளைத் தொகுத்து செயலாளருக்குச் சமர்ப்பித்தல்

- செயலாளர் அலுவலகத்திற்குக் கிடைக்கும் கடிதங்களை கணனியில் பதிந்து செயலாளருக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்தக் கடிதங்களை உரிய பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைத்தல்.

- செயலாளர் அலுவலகத்தின் பொருட்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணி வரல்.

- அமைச்சரவை நிருபம், அமைச்சரவைத் தீர்மானங்கள், ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்படும் கடிதங்கள், சட்டங்கள் மற்றும் நியதிச் சட்டங்களுடன் தொடர்பான கோவைகளை இற்றைப்படுத்திப் பேணி வரல்.

- செயலாளர் அலுவலகத்தின் அலுவல்களுக்குத் தேவையான முற்பணங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றைத் தீர்த்தல்.

**2014.12.31 ஆம் திகதியன்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்தில் பணியாற்றிய பணியாட் தொகுதி**

| பெயர் | பதவி |
|---|---|
| சாரிக்கா லியனாரச்சி | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் |
| கே.தமித்த எரன்த ஜீவக்க பெரேரா | அபிவிருத்தி உத்தியோகத்தர் III |
| எம்.எல்.என்.சஞ்சீவனீ | அபிவிருத்தி உத்தியோகத்தர் III |
| எம்.டீ.எச்.பெர்னாந்து | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| யீமா கல்ஹாரி தசநாயக்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| டப்ளியு.வீ.மதூ'ா பிரசாதினீ | முகாமைத்துவ உதவியாளர் (NODES) |
| யீக்கா லியனாரச்சி | தரவுகள் உள்ளீட்டு உதவியாளர்(களணிப் பல்கலைக்கழகம்) |
| புத்திக்க சமீர கல்தேரா | அலுவலக உதவியாளர் (NODES) |
| து'ர சம்பத் தர்மசேன | அலுவலக உதவியாளர் |

**செயலாளர் அலுவலகத்தில் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சேவையாற்றி பின்னர் வேறு பிரிவுகளுக்கு உள்ளக ரீதியாக இடமாற்றல் பெற்றவர்கள் மற்றும் புதிதாக நிரந்தரப் பதவிகளைப் பெற்ற ஊழியர்கள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

- செல்வி ஏ.எஸ்.எம். த அல்விஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் - 2014.01.28 ஆம் திகதி செயலாளர் அலுவலகத்தின் சேவையிலிருந்து தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு உள்ளக ரீதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

- செல்வி யீமா கல்ஹாரி தசநாயக்க, அபிவிருத்தி உத்தியோகத்தர் - 2014.03.31 ஆம் திகதி சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சில் இருந்து உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

- திருமதி எம்.டி.எச்.பெர்னாந்து, அபிவிருத்தி உத்தியோகத்தர் - 2014.08.20 ஆம் திகதி முதல் அமைச்சின் சட்டப் பிரிவுக்கு உள்ளக ரீதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

**<u>செயலாளர் அலுவலகத்தின் பணியாட்தொகுதியினால் மேற்கொள்ளப்பட்ட விசேட வேலைத் திட்டங்கள்</u>**

### 01. SIIIP - Solutions, Ideas, innovation, Invention and Products

**தீர்வுகள், கருத்துக்கள்,புத்தாக்கங்கள், புதிய கண்டு பிடிப்புக்கள் மற்றும் உற்பத்திகள் சம்பந்தமான வேலைத் திட்டம்.**

இந்த வேலைத் திட்டம் உயர் கல்வி அமைச்சினால் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவகங்களில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் பல்வேறு புத்தாக்கத் திறன்களை விருத்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள வேலைத் திட்டமாகும். போட்டியொன்றாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த வேலைத் திட்டத்தின் நோக்கம், பல்கலைக்கழக மாணவ மாணவிகளிடம் காணப்படும் புத்தாக்க மற்றும் ஆக்கத்திறனை வெளிக்கொணர்வதற்கான ஊக்குவிப்பினை அளிப்பதாகும்.

### 02. AACSB மாநாடு - The Association to Advance Collegiate School of Business

முகாமைத்துவக் கற்கையின் தரத்தை விருத்தி செய்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் யுயுஊளுடீ நிறுவனம் மற்றும் உயர் கல்வி அமைச்சு இணைந்து நடாத்திய செயலமர்வு

இதன் நோக்கம், இலங்கையின் பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவ கற்கைகள் பட்டப் பாடநெறிகளை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் உயர் தரத்திலான பட்டக் கற்கைப் பாடநெறியை இந்த நாட்டு மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகும். அதற்கமைய, AACSB நிறுவனத்தின் முகாமைத்துவக் கற்கைகள் சம்பந்தமான அடிப்படைகள் மற்றும் தரங்களை இந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பின்பற்றுவதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

**03. UNESCO மாநாடு** - உயர் கல்வியின் தரத்தை உறுதி செய்தல் சம்பந்தமாக பிராந்திய செயலமர்வுடன் இணையான வகையில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் உயர் கல்விக்கான தகைமைகளை ஏற்றுக்கொள்ளுதல் எனும் தலைப்பிலான பிராந்தியக் குழுவின் 13 ஆவது அமர்விற்கு அனுசரணை வழங்குதல்.

இந்த நிகழ்வில் வெளிநாடுகளில் இருந்து சுமார் 60 பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் தேசிய ரீதியாக சுமார் 100 பேர் கலந்து கொண்டனர். இதன் அடிப்படை நோக்கம், உயர் கல்விக்கான தகைமைகளை ஏற்றுக்கொள்ளும் நடைமுறை மற்றும் அங்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட சவால்கள், வெளிநாடுகளில் தகைமைகளை ஏற்றுக்கொள்வதற்கான அடிப்படை சாதனங்கள் சம்பந்தமான புரிந்துணர்வை விருத்தி செய்தல் அதாவது தேசிய தகைமைச் சட்டகம் (National Qualification Framework (NQF), தேசிய தகவல் நிலையம் (National Information center (NIC) மற்றும் பட்டச் சான்றிதழ் போன்ற விடயங்கள் பற்றிய தெளிவைப் பெற்றுக்கொள்வதாகும்.

**04. SAARC மாநாடு** - சார்க் பிராந்திய அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் மற்றும் பொருளாதார விருத்திக்கான உயர் கல்வித் துறையின் புத்தாக்கம் சம்பந்தமான செயலமர்வு

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் அமைந்துள்ள சார்க் மனித வளங்கள் அபிவிருத்தி நிலையத்தில் உயர் கல்வி அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. சாரக் பிராந்தியத்தின் சகல நாடுகளிலும் கல்வித் துறையில் புத்தாக்கம்(புதிய கண்டுபிடிப்புக்கள்) சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதுடன் உயர் கல்வித் துறையில் அந்தந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் புத்தாக்கங்கள் சம்பந்தமான மதிப்பீடு மற்றும் நிலவும் கொள்கை வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக நடுநிலைமையான மதிப்பீட்டை மேற்கொள்வதன் மூலம் பிராந்திய புத்தாக்கத் துறையில் நிலவும் பிரச்சினைகள், அதற்காக முன்வைக்கப்படும் புதிய தீர்வுகள், பிராந்திய ரீதியாக இணைந்து மேற்கொள்ள முடியுமான விடயங்கள் பற்றிய தீர்மானங்களை எடுத்தல் மற்றும் கொள்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

## தலைமைத்துவ ஆற்றல் மற்றும் சாதகமான சிந்தனை விருத்தித் திட்டம்

பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த பின்னர் உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஆயத்தமாகும் மாணவர்களின் கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான பயிற்சியின் ஊடாக தலைமைத்துவ ஆற்றல், குழு உணர்வு மற்றும் சாதகமான சிந்தனை விருத்தி என்பன இந்தப் பயிற்சிப் பாடநெறியின் நோக்கமாகும். இந்த நாட்டின் எதிர்காலத் தலைமைத்துவம் உயர் கல்வி பெறும் இளைஞர் யுவதிகளின் ஊடாகவே கட்டியெழுப்பப்படும். உயர் கல்வியைப் பெறும் காலத்திலும் அதன் பின்னரும் பட்டதாரிகளுக்கு சமூக வாழ்க்கையில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். அந்த சவால்களை வெற்றிகொண்டு எதிர்காலத்தை சிறப்பாக்கிக்கொள்வதற்குத் தேவையான ஆக்கத்திறன்மிக்க ஆளுமையை ஏற்படுத்துவதே உயர் கல்வியின் நோக்கமாகும். அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக உயர் கல்வியைப் பெறும் மாணவர்களின் மனோநிலை ரீதியாக தயார் படுத்தல், நேர முகாமைத்துவம், சரியான தீர்மானங்களை எடுத்தல், தைரியம், சுமுகமான உரையாடல், குழு உணர்வு, பிறரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் போன்ற குணப்பண்புகளை விருத்தி செய்தல் வேண்டும். இதற்காக திட்டமிடப்பட்ட தலைமைத்துவப் பயிற்சிப் பாடநெறியின் ஊடாக அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் சில நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- ☆ தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்தல்
- ☆ சமூக ஒழுக்க நெறிக்கு இயைபுபடுத்தல்
- ☆ ஆக்கத்திறனை விருத்தி செய்தல்
- ☆ சவால்களை வெற்றிகொள்வதற்காக மனோநிலை ரீதியில் தயார்படுத்தல்
- ☆ சரியான சமூக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தல்
- ☆ தொழில்சார் வழிகாட்டலைப் பெற்றுக்கொடுத்தல்
- ☆ மனோநிலை ரீதியிலான சமநிலையை விருத்தி செய்தல்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடாத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சிப் பாடநெறியானது உள்ளகப் பாடநெறியாக இருப்பதுடன் அது சிங்களம் மற்றுந்தமிழ் மொழிகளில் 21 நாட்கள் பூராவும் நடைபெறுகின்றது. பல்வேறு துறைகள் சம்பந்தமான அறிவு மற்றும் அனுபவத்தைக்கொண்ட வளவாளர்களின் பங்களிப்புடன் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பாடநெறியானது விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கூட்டுச் செயற்பாடுகள் உட்பட பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களை பயன்படுத்தி தேவையான அறிவு மற்றும் பயிற்சியை கலந்து கொள்வோருக்கு வழங்கப்படுகின்றது.

மீளாய்வு ஆண்டில் நடைபெற்ற ஆற்றல் மற்றும் சாதகமான சிந்தனை விருத்திப் பயிற்சிப் பாடநெறியின் உள்ளடக்கம் சுருக்கமாக கீழே விளக்கப்பட்டுள்ளது.

- ➢ உடற்பயிற்சி - நடத்தல் /ஓடுதல், உடலை சூடேற்றும் உடற்பயிற்சி மற்றும் தசைகளை விருத்தி செய்யும் உடற்பயிற்சிகளை அறிமுகம் செய்தல்
- ➢ கூட்டுப் பயிற்சி
- ➢ மாலை நேர விளையாட்டுக்கள் - கால்பந்தாட்டம், கைப்பந்தாட்டம், கூடைப்பந்து, வலைப்பந்து மற்றும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடல்.
- ➢ கலாசார மற்றும் பல்வேறு செயற்பாடுகள் - மாணவ, மாணவிகளின் கலை இரசனை மற்றும் உள நலனுக்காகவும் இயல்பான திறமை மற்றும் ஆற்றல்களை முன்வைப்பதற்காகவும் விவாதங்கள் / பாடுதல் /நடனமாடுதல் / நாடகம் நடித்தல் போன்ற செயற்பாடுகளில் கூட்டாக அல்லது தனியாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- ➢ விடுதி நடைமுறைகள் மற்றும் தனிப்பட்ட உடலநலம்
- ➢ சமூக பழக்கவழக்கங்கள்
- ➢ மோதல்கள் முகாமைத்துவம்

- தலைமைத்துவப் பண்புகள் விருத்தி சம்பந்தமான கோட்பாட்டு ரீதியான கற்பித்தல்கள் மற்றும் செயன்முறைச் செயற்பாடுகள், பிரஜைகள் உபசரணை நிகழ்ச்சித் திட்டம், கூட்டு செயற்பாடுகள், சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானங்களை எடுத்தல், உடனடி குழுச் செயற்பாடுகள்.
- தன்னம்பிக்கையை வளர்த்தல்
- பாலியல் பிரச்சினைகள் மற்றும் குடும்பத்தைத் திட்டமிடல்.
- முதலுதவி
- சட்டம் மற்றும் அடிப்படை மனித உரிமைகள்
- ஆலோசனைகள், தொழில்சார் வழிகாட்டல்கள்
- கலாசார சுற்றுப் பயணங்கள்
- மீளாய்வு மற்றும் கணக்கெடுப்பு

தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தின் நடவடிக்கைகள் தற்போது அமைச்சின் ஆளணியின் ஊடாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இந்தத் திட்டத்திற்காக வேறான ஆளணியொன்றை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கமைய, மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) அலுவலகத்தின் ஊடாக இந்தத் திட்டத்தின் சகல ஏற்பாட்டு நடவடிக்கைகள், நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுவதுடன் மாணவர் அலுவல்கள் பிரிவின் ஊடாக இந்தத் திட்டத்திற்குத் தேவையான வளவாளர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களை பயிற்சி நிலையங்களில் ஈடுபடுத்தல் மற்றும் அவர்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துவதனை சிபாரிசு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விளையாட்டு மற்றும் ஆற்றல் விருத்திப் பிரிவின் ஊடாக கௌரவ அமைச்சர் பிரதி அமைச்சரின் கண்காணிப்பு சுற்றுப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்படுவதுடன் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் சகல மாணவர்களையும் ஒவ்வொரு பயிற்சி நிலையங்களுக்கும் அவற்றின் கொள்ளளவுக்கேற்ப இணைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்துடன் தொடர்பான சகல பொருட்கள் மற்றும் வழங்கல்களின் பெறுகை நடவடிக்கைகள் பெறுகைப் பிரிவின் ஊடாகவும் மாணவ, மாணவிகளுக்கான ரீசர்ட், ட்ரெக் பொட்டம், கெப் தொப்பி, கையேடுகள் உட்பட அச்சிடப்பட்ட பொருட்களை விநியோகித்தல் மற்றும் வளவாளர்களின் போக்குவரத்து வசதிகள் சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் நிர்வாகப் பிரிவின் ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்துடன் தொடர்பான சகல பற்றுச் சீட்டுக்களையும் செலுத்தித் தீர்த்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் நடவடிக்கைகளை முறையே தாபனப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன மேற்கொள்கின்றன. எதிர்காலத்திலும் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 23,500 மாணவ, மாணவிகளுக்கு மூன்று(03) கிழமைகள் உள்ளகப் பயிற்சியை வழங்குவது அவசியமாக இருப்பதனாலும் அதற்குத் தேவையான இடவசதிகளைக் கொண்ட உள்ளகப் பயிற்சி நிலையங்கள் ஏனைய அரச நிறுவனங்களில் இல்லாமையினாலும் விடுதிகளுக்கான தேய்மானங்கள் சம்பந்தமாக கவனத்திற் கொள்ளாது அந்த உள்ளகப் பயிற்சி நிலையங்களை அவற்றில் காணப்படும் சகல வளங்களுடன் பெற்றுக்கொடுப்பதற்கு இராணுவப்படை, விமானப்படை, கடற்படைத் தளபதிகள் இணக்கம் தெரிவித்திருப்பதனாலும் இந்தப் பயிற்சியை அந்தப் பயிற்சி நிலையங்களில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, 2013 ஆம் ஆண்டில் இந்தப் பயிற்சி வேலைத்திட்டம் 20 பயிற்சி நிலையங்களில் 4 கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதன் 02 கட்டங்களை 2014 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு நேரிட்டது. 2014 ஆம் ஆண்டு இறுதியில் நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சிப் பாடநெறி 2014.09.07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனையும் 4 கட்டங்களாக நடாத்த வேண்டியேற்பட்டது. அதற்காக கலந்துகொண்ட மாணவர்களில் 80% களையே பயிற்சிக்காகத் தேரந்தெடுக்கப்பட்டது. கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 18740 ஆகும். தலைமைத்துவப் பயிற்சி நடாத்தப்பட்ட 20 நிலையங்களில் இணைக்கப்பட்ட மற்றும் கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| தலைமைத்துவப் பயிற்சி - 2014 | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பயிற்சி நிலையங்கள் | தலைமைத்துவப் பயிற்சி நெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | | கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை | | | | | |
| | | கட்டம் I | கட்டம் II | கட்டம் III | கட்டம் IV | மொத்தம் | கட்டம் I | கட்டம் II | கட்டம் III | கட்டம் IV | மொத்தம் | கலந்து கொண்ட வீதம்(%) |
| 1 | இராணுவப் பயிற்சிப் பாடசாலை, மாதுறுஓயா | 750 | 919 | 665 | 665 | 2,999 | 688 | 540 | 579 | 585 | 2,392 | 79.75 |
| 2 | தரைப்படை பயிற்சிப் பாடசாலை, மின்னேரிய | 800 | 988 | 635 | 523 | 2,946 | 652 | 680 | 458 | 471 | 2,261 | 76.74 |
| 3 | சண்டைப் பயிற்சிப் பாடசாலை, அம்பாறை | 550 | 632 | 481 | - | 1663 | 430 | 558 | 425 | - | 1,413 | 84.96 |
| 4 | மறைந்திருந்து சுடும் பயிற்சிப் பாடசாலை, தியத்தலாவை | 155 | 185 | 121 | - | 461 | 120 | 137 | 96 | | 353 | 76.57 |
| 5 | இராணுவப் படை கணிப்பியல் கல்லூரி - திருகோணமலை | 600 | 646 | 451 | - | 1,697 | 462 | 566 | 371 | - | 1,399 | 82.43 |
| 6 | ஆயுதப்படைகள் பயிற்சி நிலையம் - கலத்தேவ, கல்குலம, அனுராதபுரம் | 200 | 238 | 152 | - | 590 | 133 | 176 | 133 | - | 442 | 74.91 |
| 7 | பீரங்கிப் படை பயிற்சிப் பாடசாலை – மின்னேரிய | 215 | 237 | 166 | 176 | 794 | 150 | 181 | 151 | 164 | 646 | 81.36 |
| 8 | இலங்கை இராணுவப் பொறியியலாளர் பயிற்சிப் பாடசாலை – துன்கம,எம்பிலிபிட்டிய | 330 | 431 | 362 | - | 1,123 | 250 | 277 | 322 | | 849 | 75.60 |
| 9 | சமிக்ஞைப் பயிற்சி ப் பாடசாழல – பூவெலிகட, கண்டி | 235 | 297 | 174 | - | 706 | 180 | 223 | 154 | | 557 | 78.89 |
| 10 | தரைப்படைப் பிரிவு பயிற்சிப் பாடசாலை – பூஸ்ஸ | 350 | 412 | 340 | - | 1,102 | 234 | 270 | 280 | - | 784 | 71.14 |
| 11 | பொறியியல் சேவைகள் தொழிற் பயிற்சிப் பாடசாலை– தலாவை, அனுராதபுரம் | 170 | 241 | 153 | - | 564 | 127 | 170 | 131 | - | 428 | 75.88 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | சேவைகள் பயிற்சிப் பாடசாலை | 263 | 361 | 254 | - | 878 | 201 | 247 | 202 | - | 650 | 74.03 |
| 13 | இராணுவ உபகரணங்கள் பயிற்சிப் பாடசாலை – ஹொரணை | 293 | 331 | 335 | - | 959 | 218 | 212 | 217 | - | 647 | 67.46 |
| 14 | மின்சார மற்றும் இயந்திரப் பொறியியலாளர் பயிற்சிப் பாடசாலை – கன்னொருவ, கண்டி | 292 | 380 | 277 | - | 949 | 220 | 253 | 214 | - | 687 | 72.39 |
| 15 | இராணுவப்படை பொலிஸ் பயிற்சிப் பாடசாலை – கிரிதலே. | 296 | 405 | 192 | - | 893 | 315 | 278 | 130 | - | 723 | 80.96 |
| 16 | இலங்கை இராணுவ பொது சேவைகள் படையணி பயிற்சிப் பாடசாலை – குட்டிகல, பதனங்கல. | 202 | 275 | 111 | - | 588 | 160 | 200 | 88 | - | 448 | 76.19 |
| 17 | இலங்கை கடற்படை பயிற்சிப் பாடசாலை – பூஸ்ஸ | 440 | 542 | 413 | - | 1,395 | 360 | 385 | 355 | - | 1100 | 78.85 |
| 18 | இலங்கை கடற்படை பயிற்சிப் பாடசாலை – தலாத்துஓய, கண்டி | 295 | 381 | 230 | - | 906 | 231 | 258 | 211 | - | 700 | 77.26 |
| 19 | இலங்கை விமானப்படைப் பாடசாலை – தியத்தலாவை | 580 | 768 | 485 | - | 1,833 | 431 | 550 | 451 | - | 1432 | 78.12 |
| 20 | இலங்கை கடற்படை பயிற்சிப் பாடசாலை – பூனாவை | - | 627 | 530 | - | 1,157 | - | 412 | 417 | - | 829 | 71.65 |
| | **மொத்தம்** | 7,016 | 9,296 | 6,527 | 1,364 | 23,080 | 5,562 | 6,573 | 5,385 | 1,220 | 18,740 | 80.00 |

இதற்காக சுமார் 304 மில்லியன் ரூபா செலவாகியுள்ளதுடன் இந்தப் பயிற்சி வேலைத்திட்டத்தில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்கு பயிற்சிக் காலத்தில் பயன்படுத்துவதற்காக மற்றும் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்துவதற்காக ரீ-சர்ட், ட்ரெக் பொட்டம் 02 வீதம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. முழு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் 2014 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**2014 ஆம் ஆண்டில் தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பற்றிய விபரம்**


| **விடயம்** | **மேற்கொள்ளப்பட்ட செலவு** |
|---|---|
| ரீ-சர்ட், ட்ரெக் பொட்டம் மற்றும் கைநூல் என்பவற்றுக்கு | 43,461,880.00 |
| **பயிற்சி நிலையங்களுக்கான செலவுகள் :-** | |
| இராணுவப் படைக்கு | 183,657,064.54 |
| கடற் படைக்கு | 34,644,267.00 |
| விமானப் படைக்கு | 1,2881,746.07 |
| | **274,644,957.61** |
| கடிதங்கள் தயாரிப்பதற்கு மற்றும் தபாலில் இடுவதற்கு | 746,054.68 |
| அச்சிடுவதற்கு | 4,667,791.56 |
| பயிற்சி நிலைய நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான உத்தியோகபூர்வ செலவுகள் | 1,577,877.10 |
| | |
| வளவாளர்களுக்கான செலுத்துகைகள் | 5,232,767.60 |
| உரை பெயர்ப்பு செலவுகள் | 3,219,000.00 |
| | |
| கலைஞர்களுக்கான செலவுகள் | 7,804,800.00 |
| ஊடக நடவடிக்கைகளுக்கான செலவுகள் | 4,641,301.68 |
| | |
| போக்குவரத்து செலவுகள் | 712,966.00 |
| ஏனைய செலவுகள் | 724,752.27 |
| **மொத்தம்** | **303,972,268.50** |

**தலைமைத்துவப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை / பயிற்சி நிலையங்களுக்கு வருகை தந்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை/ வருகை தராத மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை**

| | தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை | வருகை தராத மாணவர்களின் எண்ணிக்கை | வருகை தந்த வீதம் |
|---|---|---|---|---|
| பெண்கள் | 13,954 | 11,878 | 2076 | 85.12% |
| ஆண்கள் | 9,126 | 6,862 | 2264 | 75.19% |
| மொத்தம் | 23,080 | 18,740 | 4340 | 80.00% |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் மாணவிகளே அதிகளவு கலந்து கொண்டனர். அது கலந்து கொண்டோரின் வீதமாக நோக்கும்போது 63% ஆகும். மாணவர்களின் வருகை வீதம் 37% ஆகும். முழு பங்கேற்பு வீதம் 80% ஆகும்.

**தலைமைத்துவப் பயிற்சி – 2014, பங்கேற்பு வீதம்**




---

**மாணவ மாணவிகள் இந்த பயிற்சி வேலைத் திட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கான காரணங்கள்**

- இந்தப் பயிற்சியானது பல்கலைக்கழகப் நுழைவுக்கு கட்டாயமாக்கப்படாமை.
- CIMA, AAT, Chartered போன்ற பரீட்சைகள் இந்த தலைமைத்துவப் பயிற்சி வேலைத் திட்டம் நடைபெற்ற தினங்களில் நடைபெற்றமை.
- Z புள்ளியின் அளவு குறைந்தமை காரணமாக தான் விரும்பிய பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படாத மாணவ மாணவிகள் தமது Z புள்ளியின் அளவை அதிகரித்து தாம் விரும்பிய பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவதற்காக மீண்டும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுதல்.
  உதாரணம்: பௌதீக விஞ்ஞானப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மருத்துவ விஞ்ஞானப் பாடநெறிக்குத் தெரிவாகும் நோக்கில் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றுதல்.

## 21 ஆம் நூற்நாண்டுக்கான உயர் கல்வித் திட்டம் (ர்.நு.வு.ஊ திட்டம்)
## உயர் கல்வி அமைச்சு

**திட்டம் சம்பந்தமான சுருக்கம்**

| | |
|---|---|
| கால எல்லை | (5 1 / 2 வருடங்கள் |
| நிதிப் பங்களிப்பு | ( உலக வங்கி |
| திட்டத்தின் மொத்தப் பெறுமதி | ( 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் |
| கடன் இலக்கம் | ( 4686 எல்.கே |
| திட்டத்தின் ஆரம்பிக்கும் திகதி | ( 2010 நவம்பர் 01 |
| திட்டத்தை பூர்த்தி செய்யும் திகதி | ( 2015 டிசம்பர் 31 |
| கடன் வழங்கல் முடிவடையும் திகதி | ( 2016 ஜூன் 30 |

**செயல் திட்டத்தின் இலக்கு:**
நீதி நிலைநாட்டப்படும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தித் தேவைகளுடன் பொருந்தக்கூடிய தரத்தில் உயர்ந்த உயர் கல்விக்கான சேவைகளை வழங்குவதற்காக உயர் கல்விக்கான கட்டமைப்பினதும் நிறுவகங்களினதும் மனித வளத்தின் சாத்திய வளத்தினை விருத்தி செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

**திட்டத்தின் குறிக்கோள்:**
- இலங்கையின் உயர் கல்வித் துறைக்கான தாபன ரீதியான சட்டகமொன்றினைக் கட்டியெழுப்புதல்
- பல்கலைக்கழகக் கல்வியில் பொருளாதார மற்றும் சமூக ரீதியான தொடர்பு, தரம் என்பவற்றை விருத்தி செய்தல்
- மாற்று உயர் கல்வித் துறையைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளத்தினை இடுதல்.
- உயர் கல்வித் துறையில் ஒழுங்கமைப்பு மற்றும் மனித வளத்தினைப் பலப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள், கொள்கை விளக்கம் மற்றும் தகவல் பரப்புதலை விருத்தி செய்தல்

**செயல் திட்டத்தின் கூறுகள்:**
1. உயர் கல்விக்கான நெறிமுறைகளை தாபன மயப்படுத்தல்.
2. தரமான கற்பித்தல் மற்றும் கற்றலை விருத்தி செய்தல்.
3. மாற்று உயர் கல்வித் துறையை பலப்படுத்தல்
4. மனித வள அபிவிருத்தி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, கற்கை மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள்.

### 2014 ஆண்டின் பௌதீக ரீதியான முன்னேற்றம்

**1 ஆவது கூறு:உயர் கல்விக்கான நெறிமுறைகளை தாபன மயப்படுத்தல்.**

***1.1 ஆவது உப கூறு : இலங்கை தகைமைச் சட்டகத்தை கட்டியெழுப்புதல்***
- 2009 – 2012 காலத்தினுள் கல்வித்துறையில் அறிஞர்கள், தொழில்நுட்ப மற்றும் தொழிற்துறை நிபுணர்களைக்கொண்ட தேசிய குழுவினால் இலங்கை தகைமை சட்டகத்தை தயாரித்து அச்சிடப்பட்டுள்ளது.

- சகல பல்கலைக்கழகங்களும் இலங்கை தகைமை சட்டகத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் 5/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டில் உயர் கல்வித் துறையில் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி மற்றும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட கற்றலை விருத்தி செய்தல் சம்பந்தமாக உயர் கல்வி அமைச்சின் கொள்கையை உள்ளடக்குவதற்காக இலங்கை தகைமைச் சட்டகம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.
- தற்போது அமுலில் இருக்கும் இலங்கை தகைமைச் சட்டகத்தை இற்றைப்படுத்தி சகல தரப்பினர் முன்னிலையிலும் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டது. அதன் இறுதிப் பிரதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளது.

***1.2 ஆவது உப கூறு : உயர் கல்வித் துறையின் தரத்தை உறுதி செய்யும் கட்டமைப்பைக் கட்டியெழுப்புதல்.***

- தாபன ரீதியான மீளாய்வுகளில் இரண்டாவது சுற்று 12 பல்கலைக்கழகங்களில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. சிபாரிசு செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம் எஞ்சியுள்ள 3 பல்கலைக்கழகங்களையும் திருத்தப்பட்ட நிறுவனங்கள் மீளாய்வு வழிகாட்டியின் கீழ் மீளாய்வுக்குட்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு 2 ஆம் சுற்றின்போது மீளாய்வுக்குட்படுத்தப்படாத 3 பல்கலைக்கழகங்களுக்கும் சென்று அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- நிறுவன மீளாய்வு கையேட்டில் திருத்தம் மேற்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டது. அதனை எதிர்வரும் நிறுவன மீளாய்வுகளின்போது பயன்படுத்துவதற்காக 2015 மே 12 ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது.
- விடய மீளாய்வு மற்றும் பாடநெறிகள் பற்றிய மீளாய்வுக் கையேடு திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் சகல பல்கலைக்கழகங்களிலும் உள்ளக ரீதியான தரத்தை உறுதி செய்யும் பிரிவுகளை சட்டமயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உள்ளக ரீதியான தரத்தை உறுதி செய்யும் பிரிவுகளை மீண்டும் செயற்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக சுற்று நிருபமொன்றை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- தரத்தை உறுதி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களின் பயனாளிகளிடையே ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.
- மாற்று உயர் கல்வித் துறைக்கான தரத்தை உறுதி செய்வதற்காக கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டது.
- 11 உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் தாபன ரீதியான மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன, கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, தெஹிவளை, மட்டக்களப்பு, பதுளை, குருநாகல் மற்றும் கேகாலை போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவகங்களாகும்.

**2 ஆவது கூறு: தரமான கற்பித்தல் மற்றும் கற்றலை விருத்தி செய்தல்.**

***2.1 உப கூறு :பல்கலைக்கழகங்களுக்கான அபிவிருத்தி உதவிகள்***

721 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க பல்கலைக்கழக அபிவிருத்தி உதவிகளின் செயற்பாடு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. அதன் நிதிசார் முன்னேற்றம் 94% ஆகும். நிதிக் கொடுக்கல் வாங்கல்களைப் நிறைவு செய்வதற்காக சகல பல்கலைக்கழகங்களுக்கும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டது.

**(அ) தகவல் தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுத்தல்**

- 2012.'.2013 கல்வி ஆண்டுப் பல்கலைக்கழக மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்ப ஆற்றல் சோதனை சகல பல்கலைக்கழகங்களிலும் நடாத்தப்பட்டது. அதன் ஆரம்ப மற்றும் இடைக்காலப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.
- மேற்கூறப்பட்ட சோதனைகளின் அடுத்த சுற்று சகல பல்கலைக்கழகங்களிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

**(ஆ) ஆங்கில மொழி நிபுணத்துவத்தை மேம்படுத்தல்**

- 2012.'.2013 கல்வியாண்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான அங்கில மொழி நிபுணத்துவ சோதனையில் வாசிப்பு, எழுதுதல், கேட்டல் மற்றும் பேச்சு போன்ற பரீட்சைகள் சகல பல்கலைக்கழகங்களிலும் நடாத்தப்பட்டதுடன் அதன் பெறுபேறுகளும் வெளியிடப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- மேற்கூறப்பட்ட சோதனைகளின் அடுத்த சுற்று சகல பல்கலைக்கழகங்களிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

**(இ) கலைப் பிரிவு மாணவர்களுக்கான புத்தாக்க அபிவிருத்திக்கான உதவிகள்**

- பல்கலைக்கழகக் கலைப் பிரிவு மாணவர்களின் தொழில் வாய்ப்பு சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் பல்கலைக்கழகங்களின் 11 பீடங்களின் 17 பாடநெறிகளுக்காக வழங்கப்பட்ட பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உதவிகள் இரண்டாம் சுற்றின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.
- இதன் கீழ் மாணவர்களின் ஆங்கில மொழித் திறன் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆற்றல், மென் திறன்களை விருத்தி செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

**(ஈ) வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளை மேம்படுத்துவதற்கான உதவிகள்**

- வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளை பட்டதாரிகளின் வேலைவாய்ப்புக்கான திறன்களை விருத்தி செய்வதற்காக செயல் திட்டத்தின் ஊடாக திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும் 260 மில்லியன் ரூபா உதவி வழங்கப்பட்டுள்ளது.
- 2010 ஒக்டோபர் மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 932 ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக சிபாரிசு செய்யப்பட்ட விரிவான மறுசீரமைப்புத் திட்டங்களின் மாதிரியை விருத்தி செய்யும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
- அதன் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் நோக்கம், நிர்வாகம் மற்றும் முகாமை மற்றும் பாடநெறிகளின் ஏற்புடைத்தாகும் தன்மை மற்றும் தரத்தை விருத்தி செய்தல், கற்றலுக்கான உதவி அமைப்புக்கள் மற்றும் வளங்களை விருத்தி செய்வதற்கும் பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிவாரியான பயிற்சி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பினை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் என்பனவாகும்.
- வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள் மற்றம வெளிவாரியான பயிற்சி நிறுவனங்களுக்கு இரண்டு தர மீளாய்வுக் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

***2.2 உப கூறு : தரம் மற்றும் புத்தாக்கத்திற்கான உதவிகள்***

- இந்த உதவித் திட்டத்தின் 1 மற்றும் 2 ஆம் கட்டத்தின் கீழ் 945 மில்லியன் ரூபா பெறுமதியான 40 உதவிகள் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு வழங்கியமைக்கான காரணம், பட்டப் பாடநெறிகளின் தரம் மற்றும் ஏற்புடைத்தாகும் தன்மையை விருத்தி செய்து பாடநெறிகளை மீண்டும் தயாரித்து 21 ஆம் நூற்றாண்டின் ஊழியச் சந்தைக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காகும்.

- இந்த உதவித் திட்டத்தின் 3 ஆம் கட்டத்தின் கீழ் பட்டப்பின் கற்கை நிறுவகம் மற்றும் 7 பீடங்களுக்கு 210 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க உதவிகள் வழங்கப்பட்டன. அதன் கீழ் ஆராய்ச்சி 19 முதுமாணி(M.A) / ஆய்வியல்(Mphil) பட்டங்கள் மற்றும் 41 முனைவர்(கலாநிதி) பட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- இந்த உதவித் திட்டத்தின் 4 ஆம் கட்டத்தின் கீழ் 11 ஆராய்ச்சி வர்த்தகமயப்படுத்தல் செயல் திட்டங்களுக்காக 110 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக நாட்டிற்கு பொருளாதார மற்றும் சமூக ரீதியான அனுகூலங்களைப் பெற்றுனக்கொள்ளக் கூடிய வகையில் பல்கலைக்கழகங்கள் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கிடையில் தொடர்பு கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

**3 ஆவது கூறு: மாற்று உயர் கல்வித் துறையை பலப்படுத்தல்**

***3.1 உப கூறு : இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தை நவீனமயப்படுத்தல்***

- உயர் தொழில்நுட்ப நிறுவகங்களுக்கான கற்கைச் சட்டகமொன்று தயாரிக்கப்பட்டது.
- 12 பாடநெறிகளுக்காக பாடநெறி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.
- இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் தலைமைத்துவம் மற்றும் தரத்தை விருத்தி செய்யும் நிலையத்தை நிர்மாணிக்கும் அலுவல், அதற்காக சிபாரிசு செய்யப்பட்ட காணியை சுவிகரிப்பதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக தாமதமாகியது. அதற்குப் பதிலாக உயர் தொழில்நுட்ப நிறுவகத்தினால் அந்த நிலையத்தை தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவக வளவில் அமைப்பதற்கு திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு தற்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
- உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு 30 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த நவீன அறிவியல் வளங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

***3.2 உப கூறு :*** **மாற்று உயர் கல்வித் துறைக்கான பிரவேசத்தின்போது வலய ரீதியிலான நியாயத்தை உறுதிசெய்தல்.**

- 97.8 மில்லின் ரூபா பெறுமதிமிக்க கட்டிடமொன்று தங்காலை உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்காக நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அதில் இரண்டாம் வருடத்திற்கான பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.
- 128.8 மில்லின் ரூபா பெறுமதிமிக்க கட்டிடமொன்று இரத்தினபுரி உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்காக நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது அதில் இரண்டாம் வருடத்திற்கான பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.
- 120 மில்லின் ரூபா பெறுமதிமிக்க கட்டிடமொன்று வவுனியா உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்காக நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது அதில் முதலாம் வருடத்திற்கான பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.
- தங்காலை மற்றும் இரத்தினபுரி உயர் தொழில்நுட்ப நிறுவகங்களுக்கு உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா நிறுவகத்திற்கான உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உயர் தொழில்நுட்ப நிறுவகங்களை நவீனமயப்படுத்துவதற்காக 31.5 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**4 ஆவது கூறு: மனித வள அபிவிருத்தி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, கற்கை மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள்.**

***4.1 உப கூறு :*** **மனித வள அபிவிருத்தி**

**(அ) உயர் கல்வி நிறுவகங்களின் கல்விசார் ஆளணிக்கு முதுமாணிப் பட்டங்களை வழங்குதல்**

- பல்கலைக்கழக கல்விசார் ஆளணிக்கு கலாநிதி / முனைவர் பட்டங்களுக்கான 170 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டு கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- அதில் 66 கலாநிதி / முனைவர் பட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- அவர்களின் 388 ஆய்வறிக்கைகளைப் வெளியீடு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- அவர்களில் 163 பேர் ஆய்வறிக்கைகளை ஒப்படைத்துள்ளதுடன் ஏற்றுக்கொள்ளப்படுவதனை எதிர்பார்த்திருக்கின்றனர்.
- 94 பேர் சர்வதேச மாநாடுகளிலும் 41 பேர் தேசிய மாநாடுகளிலும் பங்கேற்றனர்.
- இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விசார் ஆளணிக்காக வழங்கப்பட்ட முதுமாணிப் பட்டத்திற்கான 68 புலமைப் பரிசில்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**(ஆ) உயர் கல்வி நிறுவகங்களின் ஆளணிக்கான குறுகிய கால பயிற்சிப் பட்டறைகள்**

- பல்கலைக்கழக கல்விசார் ஆளணியைச் சேர்ந்த 2328 பேர், நிர்வாக ஆளணியின் 745 பேர் மற்றும் கல்விசாரா ஆளணியின் 335 பேருக்கு குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டது.
- பல்வேறு பாடங்களுக்கான 39 பயிற்சிக் கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விசார் ஆளணியின் 431 பேர், நிர்வாக ஆளணியின் 378 பேர்களுக்கு குறுகியகால பயிற்சி வழங்கப்பட்டது. அதன் பெறுமதி 11.2 மில்லியன் ரூபாக்களாகும்.
- சகல பல்கலைக்கழகங்களினதும் ஆளணியைப் பயிற்றுவிக்கும் பயற்சி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.
- அந்த நிலையங்களில் கல்விசார் ஆளணியைச் சேர்ந்த 1522 பேருக்கு 45 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் கலை கற்கைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.
- இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் கல்விசார் ஆளணியைச் சேர்ந்த 606 பேர் மற்றும் கல்விசாரா ஆளணியைச் சேர்ந்த 407 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

***4.2 உப கூறு : கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள், கொள்கை விளக்கம் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள்***

- செயல் திட்டத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 2013 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட நிதி அறிக்கையிடல் படிவத்தைப் பயன்படுத்தி அறிக்கையிடல் மேற்கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழக செயல் திட்ட ஆளணியின் சாத்தியவளத்தை விருத்தி செய்வதற்காக கண்காணிப்பு விஜயங்களும் நிதியளிப்பு மற்றும் அறிக்கையிடல் சம்பந்தமான பயிற்சி வேலைத் திட்டங்களும் நடாத்தப்பட்டன.
- பெறுகை நடவடிக்கைகளை கண்காணிக்கும் வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டது. பெறுகை நடைமுறைகள் பற்றிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் களச் சோதனைப் பயணங்களின் ஊடாக செயன்முறை ரீதியில் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. பல்கலைக்கழக செயற்திட்ட ஆளணிக்காக பெறுகை நடைமுறைகள் சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டன. பெறுகை வழிகாட்டிகளை இலகு படுத்துவதன் ஊடாக செயற்பாடுகளில் ஏற்படும் தடங்கல்களுக்கு தீர்வு காணப்படும்.
- பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைகள், தரம் மற்றும் புத்தாக்கத்திற்கான உதவிகள், வெளிவாரிப் பட்டத்திற்கான உதவிகள், கலைப் பிரிவு மாணவர்களுக்கான புத்துருவாக்க அபிவிருத்தி உதவிகள் மற்றும் பட்டப்பின் கற்கைக்கான புலமைப் பரிசில் உதவிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றின் நிதி, பௌதீக மற்றும் பெறுகை செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு அறிக்கைப்படுத்தல் முறை தயாரிக்கப்பட்டுள்ளது.
- சகல பல்கலைக்கழகங்களினதும் 2014 ஆம் ஆண்டு பட்டதாரிகள் சம்பந்தமான தொழில் வாய்ப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

- இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2103 ஆம் ஆண்டு டிப்ளோமாதாரிகள் சம்பந்தமான தொழில் வாய்ப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- 2013 பட்டதாரிகளின் மென்மையான திறன்கள் தொடர்பான தொழில் தருநர்களின் திருப்தியை அளப்பதற்கான கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் தரவுகள் பற்றிய பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**செயற் திட்டத்தின் பௌதீக ரீதியான முன்னேற்றம் - 66.5%**
**செயற் திட்டத்தின் நிதி ரீதியான முன்னேற்றம் - 2,947.80 மில்லியன் ரூபா. 58.49%**

**இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் - கட்டம் 1-B**

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் - கட்டம் 1-டீ, இலங்கை ஜனநாயக சோசலி'க் குடியரசு மற்றும் அரேபியப் பொருளாதாரத்திற்கான குவைத் நிதியம் என்பன 2011.12.20 ஆம் திகதி கைச்சாத்திட்ட 836 ஆம் இலக்க கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். நிர்மாணப் பணிகள், நிர்வாகச் செலவுகள்,அரசாங்க வரிகள் என இதற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு சுமார் 448 மில்லியன் ரூபா ஆகும்.

கலை மற்றும் கலசாரபீடம், அரபு மற்றும் இஸ்லாமியக் கற்கைகள் பீடம், வணிக மற்றும் முகாமைத்துவ பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடம் போன்ற பீடங்களைக்கொண்ட தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் கட்டம் 1-டீ இன் கீழ் விரிவு படுத்துவதன் ஊடாக சமூக மற்றும் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைக்கு பங்களிப்புச் செலுத்தப்படுகின்றது. இத் திட்டத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் பட்டப் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தல்.
- பிரதேச மற்றும் தேசிய ரீதியாக கேள்வி நிலவும் தொழில் வாய்ப்புக்களுக்கு பொருத்தமான பட்டப் பாடநெறிகளை அறிமுகஞ் செய்தல்.
- மாணவர்கள் மற்றும் ஆளணியின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தேவையான கற்கை மற்றும் கட்டிட வசதிகளை மேம்படுத்தல்.

__கடன் நிதி பற்றிய விபரம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.__

| தொடர் இல: | அபிவிருத்திப் பணிகள் | குவைத் நிதியத்திலிருந்தான நிதி ஏற்பாடு | | | திரட்டு நிதியத்தின் நிதி ஏற்பாடுகள் | | மொத்த மதிப்பீட்டுச் செவினம் (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி(குவைத் தினார்) | மதிப்பீட்டுச் செவினம் ஸ | மில்லியன் ரூபாக்களில் | ஸ | மில்லியன் ரூபாக்களில் | |
| 1 | நிர்மாணப் பணிகள் | 1,700,000.00 | 90% | 805.56 | 10% | 89.51 | 895.06 |
| 2 | வெளிவாரியான நடவடிக்கைகள் | 450,000.00 | 90% | 213.24 | 10% | 23.69 | 236.93 |
| 3 | மரத் தளபாடங்கள், உபகரணங்கள் | 320,000.00 | 80% | 151.63 | 20% | 37.91 | 189.54 |
| 4 | ஆலோசனை சேவைகள் | 200,000.00 | 100% | 94.77 | 0 | 0 | 94.77 |
| 5 | எதிர்பாரா செலவினம் | 330,000.00 | 90% | 156.37 | 10% | 17.37 | 173.75 |
| **மொத்தம்** | | **3,000,000.00** | | **1,421.57** | | **168.48** | **1,590.05** |
| **மொத்தத் தொகையில் 12% பெறுமதிசேர் வரியாக திரட்டு நிதியத்திலிருந்து** | | | | | | | **190.81** |
| **மொத்தத் தொகையில் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக திரட்டு நிதியத்திலிருந்து** | | | | | | | **31.80** |
| **உப மொத்தம்** | | | | | | | **1,812.66** |

- **நிர்வாக செலவினம்** - 57.00**மில்லியன் ரூபா**

**கட்டம் 1-B இன் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

| **தொடர் இல:** | **செயற் திட்டம்** | **மொத்த மதிப்பீட்டுச் செவினம் (மில்லியன் ரூபா)** | **ஒப்பந்தக் காலம்(மாதங்கள்)** |
|---|---|---|---|
| 01 | மாணவர் விடுதிக்கான கட்டிடத் தொகுதி - ஒலுவில் | 302 | 18 |
| 02 | மாணவர் விடுதிக்கான கட்டிடத் தொகுதி - சம்மாந்துறை | 130 | 18 |
| 03 | கல்வி வேலைத் திட்டங்களுக்கான மையம் - கல்கிஸ்ஸ | 69 | 12 |
| 04 | நீரியல் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம் - ஒலுவில் | 252 | 18 |
| 05 | ஆளணிக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் - ஒலுவில் | 168 | 12 |
| 06 | பொது சாப்பாட்டறை | 70 | 9 |
| 07 | கேட்போர் கூடம் | 200 | 15 |
| 08 | விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுத் தொகுதியை விரிவுபடுத்தல் - ஒலுவில் | 70 | 8 |

செயற் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012.12.05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கான ஆலோசனை சேவைகளை எவன்காட் எனும் நிறுவனம் வழங்குகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தம் தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| **ஒப்பந்த இலக்கம்** | **செயற் திட்டம்** | **ஒப்பந்தத் தொகை ரூ.(வட் வரி தவிர)** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **ஒப்பந்தம் கைச்சாத்திட்ட திகதி** |
|---|---|---|---|---|
| SEUDP/CW/01 | மாணவர் விடுதிக்கான கட்டிடத் தொகுதி - ஒலுவில் | 263,886,708.60 | எட்வர்ட் எண்ட் கிரிஸ்ட் | 05.06.2014 |
| SEUDP/CW/02 | மாணவர் விடுதிக்கான கட்டிடத் தொகுதி - சம்மாந்துறை | 117,558,557.00 | சென்ட்ரல் சப்லயர்ஸ் | 30.05.2014 |
| SEUDP/CW/03 | கல்வி வேலைத் திட்டங்களுக்கான மையம் - கல்கிஸ்ஸ | 64,850,953.00 | பன்தில சிவில் இன்ஜினியர்ஸ் | 30.05.2014 |
| SEUDP/CW/04 | நீரியல் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம் - ஒலுவில் | 263,334,385.00 | டெரின்டன் கன்ஸ்ட்ரக்‘ன் | 30.10.2014 |
| SEUDP/CW/05 | ஆளணிக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் - ஒலுவில் | 173,129,132.00 | எட்வர்ட் எண்ட் கிரிஸ்ட் | 30.10.2014 |

**<u>இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் - கட்டம் 1-டீ இற்கான ஆளணியின் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.</u>**

| **பதவி** | **ஊழியர் எண்ணிக்கை** |
|---|---|
| செயற் திட்டப் பணிப்பாளர் | 1 |
| * செயற் திட்டப் பொறியியலாளர் | 1 |
| **செயற் திட்டக் கணக்காளர் | 1 |
| செயற் திட்டச் செயலாளர் | 1 |
| ***வேலைத் தள ஒருங்கிணைப்பாளர் | 1 |
| முகாமைத்துவ.். கணக்கு உதவியாளர் | 1 |
| ****அலுவலக உதவியாளர் | 1 |
| சாரதி | 1 |

*திரு.சோமநாத் கமகே அவர்கள் 2013 ஜுன் மாதம் 13 ஆம் திகதி முதல் செயற் திட்டப் பொறியியலாளராக பணியாற்றுகிறார்.

** திரு.டப்ளியு.டீ.எல்.து்மன்த்த அவர்கள் 2013 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் செயற் திட்டக் கணக்காளராக பணியாற்றுகின்றார்.

***திரு.டீ.எம்.ரன்ஜித் பண்டார 2013 ஜனவரி 01 ஆம் திகதி முதல் வேலைத் தள ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியதுடன் 2014.12.31 ஆம் திகதி பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

**** திரு.எச்.எம்.பிரியந்த விஜயபண்டார 2014 டிசம்பர் 01 ஆம் திகதி முதல் அலுவலக ஊழியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் - கட்டம் 1-B இன் கீழ் 2012 செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் உரிய பதவிகளில் பணியாற்றுகின்றனர்.

**இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் - கட்டம் 1-டீ**

**2014 ஆம் ஆண்டிற்கான செலவு சம்பந்தமான பொழிப்பு**

| **விபரம்** | **செலவு** |
|---|---|
| அலுவலகக் கட்டிடத்திற்கான வாடகை மற்றும் அதனோடு தொடர்பான செலவுகள் | **1,272,450.76** |
| அலுவலகத் தளபாடங்கள் | **0.00** |
| அலுவலக உபகரணங்கள் | **646,496.00** |
| மின்சாரம் | **468,153.32** |
| நீர்க் கட்டணம் | **7,060.78** |
| தொலைத் தொடர்பு | **153,094.84** |
| ஆளணிக்கான சம்பளம் | **5,000,705.83** |
| மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படிகள் | **247,000.25** |
| போக்குவரத்து | **1,504,505.99** |
| எழுது பொருட்கள் | **211,024.00** |
| பத்திரிகைகள் மற்றும் அறிவித்தல்கள் | **11,950.00** |
| முத்திரைக் கட்டணம் | **54,758.72** |
| ஸ்ரீவேலைத் தளப் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் | **85,070.80** |
| ஆளணிக்கான பயிற்சிவேலைத் திட்டங்கள் | **859,439.44** |
| நூல்கள் மற்றும் வெளியீடுகள் | **0.00** |
| பாதுகாப்புச் செலவு | **0.00** |
| மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் | **268,880.41** |
| ஏனைய செலவுகள் | **3,325.00** |
| ஆலோசனை சேவைகள் கட்டணம்(உள்நாடு) | **6,577,801.97** |
| மாணவர் விடுதிக்கான கட்டிடத் தொகுதி - சம்மாந்துறை | **34,571,947.29** |
| கல்வி வேலைத் திட்டங்களுக்கான மையம் - கல்கிஸ்ஸ | **24,809,638.48** |
| மாணவர் விடுதிக்கான கட்டிடத் தொகுதி - ஒலுவில் | **90,349,643.15** |
| நீரியல் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம் - ஒலுவில் | **48,978,877.00** |
| ஆளணிக்கான உத்தியோகபூர்வ இல்லங்கள் - ஒலுவில் | **34,075,826.40** |
| **மொத்தம்** | **250,157,650.43** |

| | |
|---|---|
| ஆலோசனை சேவைகள் கட்டணம்(வெளிநாட்டு அ.டொ.) | **26,462.21** |

2014 ஆம் ஆண்டில் செயற் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதற் கட்ட நடவடிக்கைகள்

- செயற் குழுக் கூட்டங்களை நடாத்தியமை.
- முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியமை.
- பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல்.
- பெறுகை மற்றும் தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களை நடாத்தி தேவையான சிபாரிசுகள் மற்றும் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ளல்.
- பெறுகை மற்றும் தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான அறிக்கைகளைத் தயாரித்தல்
- ஒப்பந்தப் பணிகளை ஒப்படைப்பதற்கான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அதனோடு இணைந்த நடவடிக்கைகள்.
- 2013 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கறிக்கையைத் தயாரித்தல்
- ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரித்தல்
- 2014 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல்
- மாதாந்த கணக்குப் பொழிப்பைத் தயாரித்தல்
- வருடாந்த வரவு செலவு அறிக்கையைத் தயாரித்தல்
- செயற் திட்டம் பற்றிய விபரங்களை செயற்திட்ட முகாமை மற்றும் கண்காணிப்புத் திணைக்களத் தரவுத் தகவல்களில் இற்றைப்படுத்தல்.
- செலவு மீளளிப்புச் செய்யும் ஆவணங்களைத் தயாரித்தல்.
- பொருட்கள் கணக்கெடுப்புக் கூட்டங்களை நடாத்துதல்
- மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்
- அமைச்சினால் வேண்டப்படும் சகல அறிக்கைகள் மற்றும் தரவுகளை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுத்தல்

**கற்றறிந்த சமூகமொன்றுக்கான கல்வித் திட்டம் (நுமுளுீ)**

**கற்றறிந்த சமூகமொன்றுக்கான கல்வித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற உதவிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 03 பிரிவுகளின் கீழ் பயன்படுத்தப்பட்டது.**

**01.கட்டுமானங்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள்**

| உயர் தொழில்நுட்ப நிறுவகம் | அலுவல் | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | அங்கீகரிக்கப்பட்ட இறுதி செலுத்துகை (ரூ.) |
|---|---|---|---|
| தெஹிவளை | மதிலைப் புனரமைத்தல் மற்றும் நிர்மாணித்தல் | 2014-03-04 | 3,901,090.00 |
| | பெண்கள் விடுதியை பழுதுபார்த்தல் | 2014-02-04 | 5,282,630.00 |
| | உள்ளகப் பாதைகளை புனரமைத்தல் | 2014-02-14 | 4,984,079.00 |
| | கருங்கல் கட்டொன்றை கட்டுதல் | 2014-02-14 | 2,148,300.00 |
| | மூன்று மாடிக் கட்டிடத்தை ஆலோசனை மண்டபம், புத்தகசாலை மற்றும் களஞ்சியசாலையாக மாற்றி புனரமைத்தல் | 2013-12-18 | 2,651,390.00 |
| | வாசிகசாலையை புனரமைத்தல் | 2013-12-04 | 1,638,100.00 |
| | நிர்வாகக் கட்டிடம் மற்றும் விரிவுரை மண்டபத்தை புனரமைத்தல் | 2014-05-02 | 5,430,434.64 |
| | நிர்வாகக் கட்டிடம் மற்றும் விரிவுரை மண்டபத்தின் மின் சுற்று நடவடிக்கைகள் | 2014-05-02 | 1,084,421.60 |
| | பெண்கள் விடுதியின் மின் சுற்று நடவடிக்கைகள் | 2014-03-12 | 506,140.00 |
| | இரண்டு மாடி பாதுகாப்பு கட்டிடம் மற்றும் வன்பொருள் ஆய்வுகூடமொன்றை நிர்மாணித்தல் | 2014-03-12 | 3,901,355.00 |
| காலி | துவிச்சக்கர வண்டி நிறுத்துமிடம் மற்றும் மதிலை நிர்மாணித்தல் | 2014-03-04 | 1,887,844.91 |
| | குளிரூட்டி வழங்கல் | 2014.03.19 | 1,369,237.30 |
| | மதிலை நிர்மாணித்தல் | 2014-03-04 | 784,368.77 |
| | உள்ளக பாதைகளை புனரமைத்தல் | 2014-02-04 | 585,367.20 |
| | உயர் தொழில்நுட்ப நிறுவகங்களின் பழுதுபார்த்தல் நடவடிக்கை | 2014-05-04 | 3,858,274.37 |
| | வேலைத்தளக் கட்டிடத்திற்கு இரும்பு வலை யன்னல்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | 2014-03-04 | 1,591,524.20 |
| குருநாகல் | மேற்கூரையை (Ceiling) நிர்மாணித்தல் | 2013-12-22 | 948,400.00 |

| | | | |
|---|---|---|---|
| **திருகோணமலை** | உணவகம் மற்றும் பொது மண்டபத்தை நிர்மாணித்தல் | 2014-04-19 | 3,682,582.51 |
| | தற்போதைய கட்டிடத்திற்கு நிறம்(Paint) பூசுதல் | 2014-02-22 | 1,894,052.00 |
| **கம்பஹா** | பணியாட் தொகுதிக்கான ஓய்வறை மற்றும் வாசிகசாலையை வேறாக்குதல் மற்றும் களஞ்சியசாலையை நிர்மாணித்தல் | 2014-03-27 | 2,413,271.15 |
| | மதிலை நிர்மாணித்தல் | 2014-03-27 | 3,369,861.00 |
| | உயர் தொழில்நுட்ப நிறுவகத்திற்கான நீர் வழங்கல் | 2014-02-12 | 1,277,685.00 |
| | பழைய கட்டிடத்தை பழுதுபார்த்தல்(உணவகம்) | 2014-04-03 | 2,534,968.48 |
| **யாழ்ப்பாணம்** | உணவகத்தை நிர்மாணித்தல் | 2014-05-24 | 5,312,655.00 |
| **கண்டி** | பணியாட் தொகுதி ஓய்வறை மற்றும் வாசிகசாலையை வேறாக்குவதற்கான உபகரணங்களை(Fixing Partition) வழங்கல் மற்றும் பொருத்துதல் | 2014-03-21 | 1,170,281.10 |
| | தற்போது காணப்படும் யன்னல்களுக்கு இரும்பு வலைகள் மற்றும் மாடிப் படிக்கட்டுகளை வழங்கல் மற்றும் பொருத்துதல் | 2014-04-27 | 1,777,927.40 |
| | உத்தேச மின் பிறப்பாக்கி (Generator) வைத்திருக்கும் அறை மற்றும் மின்மாற்றிகளுக்கான (Transformer) அறையை நிர்மாணித்தல் | 2014-04-27 | 1,816,083.54 |
| | மின் சுற்றுக்களைப் பொருத்துதல் | 2014-04-30 | 8,046,558.76 |
| | கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவகத்தை புனரமைத்தல் | 2014-04-30 | 972,093.31 |
| **கேகாலை** | கருங்கல் கட்டொன்றை கட்டுதல் | 2014-05-28 | 4,829,821.00 |
| **கொழும்பு** | 64 கி.வொட் சூரிய சக்தி இயந்திரத்தை வழங்குதல், பொருத்துதல் | 2014-04-10 | 13,340,000.00 |
| | | **செலவு செய்யப்பட்ட தொகை** | **94,990,797.22** |

## 02. அலுவலக மற்றும் விரிவுரை மண்டபத்திற்கான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல்

| இல. | பொருட்கள் | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | அங்கீகரிக்கப்பட்ட இறுதி செலுத்துகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 | ஆய்வுகூட மற்றும் பட்டறைக் கதிரைகள் | 27.12.2013 | 1,740,650.00 |
| 2 | விரிவுரையாளர் கதிரைகள் | 28.04.2014 | 492,760.00 |
| 3 | நூலக கதிரைகள் | 28.04.2014 | 359,040.00 |
| 4 | கணனிக் கதிரைகள் | 16.02.2014 | 1,849,222.00 |
| 5 | விரிவுரை மண்டபக் கதிரைகள் | 19.02.2014 | 7,985,715.00 |
| 6 | கணனி மேசைகள் | 28.02.2014 | 1,710,100.00 |
| 7 | இரும்பு அலுமாரிகள் | 28.02.2015 | 1,809,600.00 |
| 8 | விரிவுரையாளர் மேசைகள் | 28.02.2016 | 1,663,890.00 |
| 9 | எழுதும் வெள்ளைப் பலகைகள் | 28.02.2017 | 403,520.00 |
| 10 | வராந்தா கதிரைகள் | 25.02.2014 | 329,340.00 |
| 11 | வளைக்கக்கூடிய மேசைகள் | 13.05.2014 | 4,433,814.00 |
| | | **செலவு செய்யப்பட்ட தொகை** | **18,343,837.00** |

## 03. நூலகத்திற்கான நூல்களைக் கொள்வனவு செய்தல்

| பாடப் பரப்பு | நூல்களின் எண்ணிக்கை |
|---|---|
| கணக்கியல் | 4785 |
| விவசாயம் | 405 |
| கட்டிட சேவைகள் மற்றும் பொறியியல் | 240 |
| சிவில் பொறியியல் | 520 |
| மின்சாரப் பொறியியல் | 2390 |
| ஆங்கிலம் | 4047 |
| உணவுத் தொழில்நுட்பம் | 259 |
| தகவல் தொழில்நுட்பம் | 2339 |
| முகாமைத்துவம் | 2689 |
| அளவுத் திட்ட ஆய்வு | 100 |
| சுற்றுலாத்துறை வர்த்தகம் | 1589 |
| மொத்த நூல்கள் | 19363 |
| **செலவு செய்யப்பட்ட தொகை** | **34,121,518.35** |

**<u>கற்றறிந்த சமூகமொன்றுக்கான கல்வித் திட்டத்திற்காக(நுமுளூ) கிடைக்கப்பெற்ற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்கள்</u>**
**(2014.01.01 / 2014.12.31)**

| இல. | விபரம் | அளவு | மொத்தத் தொகை(வட் வரி இன்றி) (ரூ.) |
|---|---|---|---|
| 1 | கணனி (HP ProDesk 400 GI Business PC) | 1,000 | 89,970,000.00 |
| 2 | DCP 650 VA UPS | 1,200 | 5,604,000.00 |
| 3 | Epson K100 Inkjet கணனி அச்சுப் பொறிகள் | 100 | 2,107,500.00 |
| 4 | மடிக் கணனிகள் | 335 | 30,252,175.00 |
| 5 | பல்லூடக ஒளிப்படக் காட்டிகள் (Multimedia Projector) | 125 | 7,412,500.00 |
| 6 | போட்டோ பிரதி இயந்திரம் | 36 | 4,176,000.00 |
| **மொத்தம்** | | | **139,522,175.00** |